بسم الله الرحمن الرحيم　نحمده ونصلي على رسوله الكريم　وعلى عبده المسيح الموعود

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّأَنْتُمْ أَذِلَّةٌ

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

தொகுதி 6

இதழ் 47

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

19 ரபீவுஸ் ஸானி 1443 ஹிஜ்ரி கமரி 25 நுபுவ்வத் 1400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 25 நவம்பர் 2021


## அல்லாஹ்வின் கட்டளை

وَكُنْتُ عَلَيْهِمْ شَهِيْدًا مَّا دُمْتُ فِيْهِمْ ۚ فَلَمَّا تَوَفَّيْتَنِيْ كُنْتَ أَنْتَ الرَّقِيْبَ عَلَيْهِمْ ۚ وَأَنْتَ عَلٰى كُلِّ شَيْءٍ شَهِيْدٌ

நான் அவர்களுடன் இருந்த காலம் வரை அவர்களுக்கு நான் சாட்சியாக இருந்தேன். ஆனால் நீ எனக்கு மரணத்தை தந்த பின் நீயே அவர்களைக் கண்காணித்தவனாக இருந்தாய். மேலும் நீயே எல்லாவற்றிற்கும் சாட்சியாளனாக இருக்கிறாய். (5:118)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சிறப்பு என்பது அன்னாரின் உள்ளத்திலுள்ள விஷயத்தின் காரணமாகவே ஆகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். உண்மையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் காட்டிய உண்மைக்கு நிகரான உதாரணம் கிடைப்பது கடினமாகும்**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தன்னிகரற்ற உண்மை

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு ஸித்தீக் என்ற பட்டத்தை வழங்கியுள்ளார்கள். அன்னாரிடத்தில் என்னென்ன சிறப்புகள் இருந்தன என்பதை (முழுமையாக) அல்லாஹ்வே நன்கறிவான். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சிறப்பு என்பது அன்னாரின் உள்ளத்திலுள்ள விஷயத்தின் காரணமாகவே ஆகும் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். உண்மையில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் காட்டிய உண்மைக்கு நிகரான உதாரணம் கிடைப்பது கடினமாகும்.

உண்மை என்னவென்றால், எல்லா காலத்திலும் ஸித்தீக்கின் சிறப்புகளை பெற ஆசைப்படுகின்ற நபர் அபூபக்ரின் தன்மைகளையும், பண்புகளையும் தன்னுள் ஏற்படுத்திக் கொள்வதற்கு இயன்ற அளவு அதற்காக முயற்சி செய்வது அவசியமாகும். மேலும் இயன்ற வரை துஆவும் செய்ய வேண்டும். ஒருவர் எதுவரை அபூபக்ரின் இயல்பின் நிழலை தன்மீது ஏற்படுத்திக் கொள்ள மாட்டாரோ மேலும் அதற்கேற்ப தம்மை வடிவமைத்துக் கொள்ள மாட்டாரோ அதுவரை அவர் அந்த சிறப்புகளை பெற முடியாது.

### அபூபக்ரின் இயல்பு என்பது என்ன?

அபூபக்ரின் இயல்பு என்னவாக இருந்தது? இது குறித்து விரிவாக விவாதிக்கவும், உரையாடவும் இது சந்தர்ப்பம் அல்ல. ஏனென்றால் அதை எடுத்துரைப்பதற்கு அதிக காலம் தேவைப்படும். சுருக்கமாக நான் ஒரு சம்பவத்தை கூறி விடுகின்றேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபித்துவ வாதத்தை வெளிப்படுத்தியபோது ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் சிரியாவை நோக்கி சென்றிருந்தார்கள். அன்னார் திரும்பி வந்தார்கள். அப்போது வழிப்பாதையில் இருந்தார்கள். அந்நிலையில் ஒரு நபர் அன்னாரை

(தொடர்ச்சி 11 வது பக்கம்.....)

**பொது மக்களிடத்தில் பிரபலமாக இருக்கின்ற ஜின்னிற்கு எந்த வடிவமும் இல்லை. இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டிருந்த ஜின்கள் மனிதர்களாகவே இருந்தார்கள்**

சூரா அல்ஜின் மற்றும் சூரா அஹ்காஃபிலிருந்து தெரிய வருவது என்னவென்றால் ஜின்களின் ஒரு கூட்டம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்டது. ஜின்களின் ஒரு குழு இறைத்தூதர் (ஸல்) அவர்களை சந்திப்பதற்காக வந்தது என்றும் ஹதீஸ்களிலிருந்து தெரிய வருகின்றது.

ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இது தொடர்பாக விளக்கமளித்தவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் நிகழ்ந்த இந்த சம்பவம் குறித்து கேள்வி எஞ்சியிருக்கின்றது. அதாவது அந்த நேரத்தில் ஈமான் கொண்ட அந்த ஜின்கள் எப்படிப்பட்ட படைப்பினமாக இருந்தார்கள். இது தொடர்பாக திருக்குர்ஆனிலிருந்து நிரூபணமாகுவது என்னவென்றால், அவர்கள் யூதர்களாக இருந்தனர். ஏனென்றால் மூஸாவின் வேதம் மற்றும் அதன் மீது நம்பிக்கை கொள்வது தொடர்பான குறிப்பை அவர்கள் செய்கின்றனர். எனவே அவர்கள் யூதர்களாக இருந்தனர் என்பது தெரிய வருகின்றது. அல்லாஹ் அவர்களை ஜின் என்று ஏன் கூறினான் என்றால், அவர்கள் வெளியூரைச் சேர்ந்த மக்களாக இருந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இரகசியமாக சந்தித்தார்கள். அவர்கள் நஸீபைனைச் சார்ந்தவர்கள் என்று சில ஹதீஸ்களிலிருந்து தெரிய வருகின்றது. மேலும் இரவு நேரத்தில் இரகசியமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சந்தித்து வந்தார்கள்.

(ஸஹீஹ் புகாரி, கிதாபுல் மனாகிபுல் அன்ஸார் வ முஸ்லிம் தொகுதி 1)

அவர்கள் திரும்பிச் சென்ற சம்பவம் மற்றும் அவர்களின் சமுதாயத்திற்கு மத்தியில் நிகழ்ந்த சம்பவத்தை அல்லாஹ் திருக்குர்ஆனிலும் கூறியுள்ளான்: அரபு மக்களின் எதிர்ப்பின் காரணமாக அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சந்தித்தார்கள் என்றும், அன்னார் (ஸல்) அவர்களிடமிருந்து

(தொடர்ச்சி 11 வது பக்கம்.....)

## நபிமொழி

### சிறந்த செயல்

1519: அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: செயல்களில் சிறந்த செயல் எது? என்று நபி (ஸல்) அவர்களிடம் கேட்கப்பட்டது. அல்லாஹ்வின் மீதும் அவனது தூதரின் மீதும் நம்பிக்கை கொள்வது என்று அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதற்குப் பிறகு எது (சிறந்தது)? என்று கேட்கப்பட்டபோது, அல்லாஹ்வின் வழியில் ஜிஹாது செய்வது என்று கூறினார்கள். அதற்குப் பிறகு எது (சிறந்தது)? என்று கேட்கப்பட்டபோது, முழுக்க முழுக்க நன்மையையும், கட்டுப்படுதலையும் அடிப்படையாகக் கொண்ட ஹஜ் ஆகும் என்று கூறினார்கள்.

1521: அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவர் அல்லாஹ்வுக்காக ஹஜ்செய்தாரோ மேலும் ஆபாசமான விஷயங்களை பேசவில்லையோ, இறை கட்டளைகளுக்கு மாற்றம் செய்யவில்லையோ அவர் அவருடைய தாய் அவரைப் பெற்றெடுத்த நாளில் இருந்ததைப் போன்று (பாவமறியாயப் பாலகனாகத்) திரும்புவார்.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 3 பாடம் அல்ஹஜ் – 2008 ஆம் ஆண்டு காதியான் வெளியீடு)

## இந்த இதழில்


திருக்குர்ஆன்

நபிமொழி

மல்ஃபூஸாத்

தஃப்ஸீரே கபீர் (திருக்குர்ஆன் விளக்கவுரை )

குத்பா பேருரை 22 அக்டோபர் 2021 (முழுவதுமாக)

ஹுஸூர் (அய்ய) அவர்களின் நியூஸிலாந்து சுற்றுப்பயணம் 2013



பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.

Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்து பெற்ற கலீஃபா ஹஸ்ரத் உமர் ஃபாரூக் (ரலி) அவர்களின் புகழுக்குரிய பண்புகளைப் பற்றிய நற்குறிப்புகள்**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 22 அக்டோபர் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **அஹா மாதம் 22 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

கடந்த குத்பாவில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஷஹாதத் தொடர்பான நற்குறிப்பில் ஹஸ்ரத் உபைதுல்லாஹ் பின் உமர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) ஆகியோருக்கிடையில் நிகழ்ந்த பரஸ்பர மோதலை நான் குறிப்பிட்டிருந்தேன். அறிவிப்புகளில் கூறப்பட்டிருந்ததை எடுத்துரைத்திருந்தேன். மேலும் மற்றோர் அறிவிப்பும் உள்ளது. அவர்களுக்கிடையில் நடைபெற்ற மோதல் எந்த அளவுக்கு உண்மையானது என்பதை அல்லாஹ்வே நன்கறிவான் என்றும் நான் கூறியிருந்தேன். இது தொடர்பாக ஆய்விற்குப் பிறகு தெரிய வந்துள்ள விஷயங்களையும் நான் எடுத்துரைத்து விடுகின்றேன்.

ஹஸ்ரத் உபைதுல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடன் மோதிய அந்த நேரம் வரை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கிலாஃபத் அரியணையில் அமர்ந்திருக்கவில்லை. மதீனாவில் இன்று எந்தவொரு கைதியையும் நான் உயிருடன் விட்டு வைக்க மாட்டேன் என்பது ஹஸ்ரத் உபைதுல்லாஹ் (ரலி) அவர்களின் எண்ணமாக இருந்தது.

முன்னரும் இது எடுத்துரைக்கப்பட்டது. ஆரம்ப கால முஹாஜிர்கள் அன்னாருக்கு எதிராக ஒன்றிணைந்தனர். மேலும் அன்னாரை தடுத்து நிறுத்தினர். மேலும் அன்னாரை எச்சரிக்கவும் செய்தனர். ஆனால் அவர் முஹாஜிர்களுக்கு கட்டுப்படவில்லை. மேலும் அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அவர்களை அதாவது எத்துனை அடிமைகள் உள்ளனரோ நிச்சயம் அவர்கள் அனைவரையும் கொன்று விடுவேன் என்று அன்னார் கூறினார்கள். எந்த அளவுக்கென்றால் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் அன்னாருடன் தொடர்ந்து பேசி வந்தார்கள். இறுதியில் அன்னார் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்களிடம் வாளை ஒப்படைத்து விட்டார்கள். பின்னர் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி) அவர்கள் புரிய வைப்பதற்காக அன்னாரிடம் வந்தபோது அவருடனும் ஹஸ்ரத் உபைதுல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் சண்டையிட்டார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுடன் சண்டை நிகழ்ந்தது. மக்கள் காப்பாற்றினார்கள். விலக்கி விட்டார்கள் என்று ஏற்கனவே கூறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இவ்வாறு குறிப்பு கிடைக்கின்றது: அதாவது இந்த சம்பவம் நிகழ்ந்தபோது இன்னும் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்யப்பட்டிருக்கவில்லை. அதாவது ஏற்கனவே கூறப்பட்டதுபோன்று அந்த நேரம் வரை ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கவில்லை.

(முஹம்மது ரஸா அவர்கள் எழுதிய சீரத் உமர் ஃபாரூக் என்ற நூல் பக்கம் 342, 343 – 2010 ஆம் ஆண்டு லாஹூரிலுள்ள இஸ்லாமியா அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

இதன் பிறகு ஹஸ்ரத் உபைதுல்லாஹ் (ரலி) அவர்கள் சிறைபிடிக்கப்பட்டார்கள் என்றும் குறிப்பு கிடைக்கின்றது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் பைஅத்திற்குப் பிறகு கிலாஃபத் அரியணையில் அமர்ந்தபோது ஹஸ்ரத் உபைதுல்லாஹ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு முன்னால் நிறுத்தப்பட்டார்கள். அப்போது அமீருல் மூமினீன் அவர்கள், இஸ்லாத்தில் பிளவை உருவாக்கிய இந்த நபரைக் குறித்து எனக்கு ஆலோசனை கூறுங்கள் என்று முஹாஜிர்கள் மற்றும் அன்ஸார் சகோதரர்களின் ஒரு கூட்டத்தினரிடம் கேட்டார்கள். ஹஸ்ரத் அலீ பின் அபீ தாலிப் (ரலி) அவர்கள் அவரை விட்டு விடுவது நீதிக்கு அப்பாற்றப்பட்டதாகும். எனது கருத்துப்படி அவரை அதாவது ஹஸ்ரத் உபைதுல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களை கொலை செய்து விட வேண்டும் என்று கூறினார்கள். ஆனால் சில முஹாஜிர்கள் இந்த கருத்து பொறுத்துக் கொள்ள முடியாததாகவும், அதீத கடுமையை கொண்டதாக இருப்பதாகவும் கூறினார்கள். மேலும் நேற்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். இன்று அன்னாரின் மகனை கொன்று விட வேண்டுமா? என்றும் கேட்டனர்.

இந்த ஆட்சேபனை அங்கு இருந்தவர்களை மௌனமாக்கி விட்டது. மேலும் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களும் அமைதியாக இருந்தார்கள். ஆனால் எவ்வாறிருப்பினும் இந்த அபாயமான சூழ்நிலையில் ஏதாவதொரு வழியை அங்கு கூடியிருந்தவர்களில் யாராவது ஒரு நபர் கூற வேண்டும். ஆலோசனை வழங்க வேண்டும் என்று ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் விரும்பினார்கள். ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் (ரலி) அவர்கள் அந்த சபையில் இருந்தார்கள். அல்லாஹ் தங்களை இதிலிருந்து மன்னித்து வைத்துள்ளான். தாங்கள் முஸ்லிம்களின் அமீராக இல்லாதபோது நிகழ்ந்த விஷயமாகும் இது. இந்த சம்பவம் தங்களின் கிலாஃபத் காலத்தில் நிகழவில்லை. எனவே தங்கள் மீது இதில் எந்த பொறுப்பும் இல்லை என்று கூறினார்கள். ஆனால் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அன்னாரின் இந்த கருத்தில் மனநிறைவு கொள்ளவில்லை.

எவ்வாறிருப்பினும் கொலைக்கு பகரமாக இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட வேண்டும் என்பதை சிறந்ததாக அன்னார் கருதினார்கள். நான் கொலையுண்ட அந்த நபர்களின் வலியாக இருக்கின்றேன். எனவே இரத்தம் சிந்தப்பட்டதற்கான இழப்பீட்டுத் தொகையை நிர்ணயம் செய்து அதை நான் எனது செல்வத்திலிருந்து வழங்குவேன் என்று அன்னார் (ரலி) கூறினார்கள்.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யதுனா உமர் ஃபாரூக் அஃஸம் என்ற நூல் பக்கம் 881, 882 – லாஹூரிலுள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டது)

தபரி வரலாற்றிற்கேற்ப ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உபைதுல்லாஹ் (ரலி) அவர்களை ஹர்முஸானின் மகனிடம் ஒப்படைத்து விட்டார்கள். அவர் தனது தந்தையின் கொலைக்கு பழிவாங்கும் விதமாக கொலை செய்து கொள்ளட்டும் என்று ஒப்படைத்து விட்டார்கள். ஆனால் மகன் மன்னித்து விட்டார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இந்த சம்பவத்தை எடுத்துரைத்துள்ளார்கள். ஒரு விவகாரத்தை தீர்த்தவாறு அதன் விளக்கத்தில் எழுதியுள்ளவற்றை நான் கடந்த ஒரு குத்பாவில் எடுத்துரைத்திருக்கின்றேன். இருந்தபோதிலும் இங்கு விளக்கத்திற்காக மீண்டும் கூறி விடுகின்றேன். உடன்படிக்கையின் கீழ் இருக்கின்ற காஃபிரின் கொலைக்கு பகரமாக கொலையாளிக்கு தண்டனை கொடுக்க முடியுமா? காஃபிரின் கொலைக்கு பழி வாங்கும் விதமாக கொலையாளியான முஸ்லிமிற்கு (மரண) தண்டனை வழங்க முடியுமா? முடியாதா?

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: குமாஸ்பான் பின் ஹுர்முஸான் தனது தந்தையின் கொலை சம்பவம் பற்றி தபரியில் கூறுகின்றார்: ஹுர்முஸான் ஓர் ஈரானிய தலைவராகவும், மஜூஸி மார்க்கத்தைச் சார்ந்தவராகவும் இருந்தான். மேலும் ஹஸ்ரத் உமர் (ரலி) இரண்டாவது கலீஃபாவின் கொலையின் சதித்திட்டத்தில் பங்கு பெற்றதாக அவன் மீது சந்தேகம் கொள்ளப்பட்டது. அதனால் எந்த விசாரணையுமின்றி உணர்ச்சிவசப்பட்டு ஹஸ்ரத் உபைதுல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அவனை கொன்று விட்டார்கள்.

அவனது மகன் இவ்வாறு கூறுகின்றார்: ஈரானிய மக்கள் மதீனாவில் ஒருவர் மற்றவருடன் இணைந்து வாழ்ந்து வந்தனர். பொதுவான சட்டத்திற்கேற்ப அந்நிய நாடுகளில் வெளிநாட்டைச் சேர்ந்தவர் தெளிவாக வெளிப்பட்டு விடுகின்றார். ஒரு நாள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கொலையாளியான ஃபிர்அவ்ஸ் எனது தந்தையை சந்தித்தான். அவனிடம் இரு முனையிலும் கூர்மையாக்கப்பட்டிருந்த ஒரு கத்தி இருந்தது. எனது தந்தையார் அந்த கத்தியை பிடித்துக் கொண்டார். மேலும் இந்த நாட்டில் இந்த கத்தியைக் கொண்டு நீ என்ன பணி செய்கின்றாய்? என்று அவனிடம் கேட்டார். அதாவது இந்த நாடு அமைதி நிறைந்த தேசமாகும். இதில்

ஆயுதங்களுக்கு என்ன அவசியம் உள்ளது? என்று கேட்டார். (ஹர்முஸானின் தந்தை இதனைக் கூறுகின்றார்) அதற்கு நான் இதனைக் கொண்டு ஒட்டகத்தை மேய்க்கின்ற பணியை செய்கின்றேன் என்று அவன் கூறினான். அவர்கள் இருவரும் தங்களுக்குள் பேசிக் கொண்டிருந்தபோது அந்த நேரத்தில் ஒருவர் அவர்களை பார்த்து விட்டார். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கொலை செய்யப்பட்டபோது நான் சுயமே ஹர்முஸானிற்கு இந்த கத்தியை ஃபிர்அவ்ஸ் கொடுத்ததை பார்த்தேன் என்று அவர் கூறினார். அப்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இளைய மகனான ஹஸ்ரத் உபைதுல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் சென்று எனது தந்தையை கொன்று விட்டார்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கலீஃபா ஆனபோது என்னை அழைத்தார்கள். மேலும் என்னிடம் (அவரை) ஒப்படைத்து விட்டார்கள். மேலும் எனது மகனே! இவர் உனது தந்தையின் கொலையாளி ஆவார். நீ எங்களை விட இவர் மீது அதிக உரிமை பெற்றுள்ளாய். எனவே செல். இவரை கொன்று விடு என்று கூறினார்கள். நான் அவரை பிடித்துக் கொண்டேன். மேலும் நகரத்தை விட்டு வெளியேறினேன். வழியில் என்னை சந்தித்த நபர்கள் அனைவரும் என்னுடன் இணைந்து கொண்டனர். எனினும் எவரும் சண்டையிடவில்லை. நான் அவரை விட்டு விட வேண்டும் என்று மட்டுமே அவர்கள் என்னிடம் விண்ணப்பித்து வந்தனர். எனவே நான் அனைத்து முஸ்லிம்களிடமும் நான் இவரை கொலை செய்வது எனது உரிமை இல்லையா? என்று கேட்டேன். அதற்கு ஆம்! அவரைக் கொலை செய்வதற்கு உமக்கு உரிமை உள்ளது என்று அனைவரும் பதிலளித்தனர். மேலும் உபைதுல்லாஹ் தீய பணியை செய்து விட்டார் என்று அனைவரும் அவரை வசைபாடினர். இவரை என்னிடமிருந்து விடுவிப்பது உங்களின் கடமையில்லையா? என்று அவர்களிடம் நான் கேட்டேன். ஒருபோதும் இல்லை என்று அவர்கள் கூறினர்.

பின்னர் எந்த ஆதாரமுமின்றி எனது தந்தையை அவர் கொலை செய்து விட்டார் என்று உபைதுல்லாஹ்வை மக்கள் ஏசிப் பேசினர். அப்போது இறைவனுக்காகவும், அந்த மக்களுக்காகவும் நான் அவரை விட்டு விட்டேன். முஸ்லிம்கள் மகிழ்ச்சி வெள்ளத்தில் என்னை தமது தோள்களில் சுமந்து கொண்டனர். இறைவன் மீது ஆணையாக! நான் எனது வீடு வரை மக்களின் தலைகள் மற்றும் தோள்கள் மீது அமர்ந்தவாறு வந்தடைந்தேன். அவர்கள் என்னை நிலத்தில் கால்பதிக்க விடவில்லை.

ஒருவர் ஓர் ஆயுதம் கொண்டு ஒருவரை கொன்று விட்டால் அவரும் கொல்லப்படுவார் என்று இந்த அறிவிப்பிலிருந்து நிரூபணமாகின்றது. அதேபோன்று கொலையாளியை கைது செய்வதும், அவனுக்கு தண்டனை கொடுப்பதும் அரசாங்கமே ஆகும் என்பதும் நிரூபணமாகின்றது. ஏனென்றால் இந்த அறிவிப்பிலிருந்து இது தெரிய வருகின்றது. அதாவது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களே ஹஸ்ரத் உபைதுல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களை கைது செய்திருந்தார்கள். மேலும் அவரை கொலை செய்வதற்காக ஹுர்முஸானின் மகனிடமும் அன்னாரே ஒப்படைத்திருந்தார்கள். ஹுர்முஸானின் எந்தவொரு வாரிசும் அப்போது வழக்கும் தொடுக்கவில்லை. கைதும் செய்திருக்கவில்லை.

இந்த இடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த இடத்தில் இந்த சந்தேகத்தை அகற்றுவதும் அவசியம் ஆகும். அதாவது கொலையாளிக்கு தண்டனை கொடுப்பதற்காக ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் செய்ததுபோன்று கொலையாளியை கொலையுண்டவர்களின் வாரிசுகளிடம் ஒப்படைத்து விட வேண்டுமா? அல்லது அரசாங்கமே தண்டனை கொடுக்க வேண்டுமா? என்ற சந்தேகத்தை அகற்றுவதும் அவசியமாகும்.

எனவே நினைவிற் கொள்ளுங்கள். இந்த விவகாரம் ஒரு பகுதியின் விவகாரமாகும். எனவே ஒவ்வொரு காலத்தின் தேவைக்கேற்ப அமல் செய்து கொள்ளுமாறு இஸ்லாம் இந்த விவகாரத்தை விட்டு விட்டது. சமுதாயம் தமது பண்பாடு, சூழல் ஆகியவற்றிற்கேற்ப எந்த வழிமுறையை மிகவும் பயனுள்ளதாக கருதுமோ அதனை மேற்கொள்ள முடியும். இந்த இரண்டு வழிமுறைகளுமே சில குறிப்பான நிலைகளில் பயனுள்ளதாக அமைகின்றன என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

(தஃப்ஸீரே கபீர் தொகுதி 2 பக்கம் 259–261)

இந்த விளக்கத்தை வழங்கிய பிறகு நான் தற்போது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இன்னும் சில சம்பவங்களை குறிப்பிடுகின்றேன். மரண தருவாயில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பணிவு மற்றும் தாழ்மை குணத்தின் நிலை என்னவாக இருந்தது? இது தொடர்பாக அன்னாரின் மகன் இவ்வாறு கூறுகின்றார்:

அன்னார் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) தனது மகனிடம் இவ்வாறு கூறினார்கள்:

அதாவது எனது கஃபன் துணியில் நடுநிலையை மேற்கொள்ள வேண்டும். அல்லாஹ்விடம் எனக்கு நன்மை இருக்குமென்றால் இதை விட நல்ல ஆடையைக் கொண்டு இந்த ஆடையை அவன் மாற்றி விடுவான். ஒருவேளை நான் இதற்கு எதிராக இருந்தால் அவன் என்னிடமிருந்து பறித்துக் கொள்வான். அவன் பறிப்பதில் வேகமாக செயல்படுவான். மேலும் எனது கபர் விவகாரத்திலும் நடுநிலையை பேணுங்கள். அல்லாஹ்விடத்தில் அதில் எனக்கு நன்மை இருக்குமென்றால் அவன் அதனை எந்த அளவிற்கு பரந்து பட்டதாக ஆக்கி விடுவான் என்றால் எனது பார்வை செல்லும் வரை அதை விரிவுபடுத்தி விடுவான். இதற்கெதிரானவனாக நான் இருந்தால் அவன் என்னை தொல்லைக்கு உள்ளாக்கி விடுவான். மேலும் எனது ஜனாஸாவுடன் எந்தப் பெண்ணையும் அழைத்துச் செல்ல வேண்டாம். மேலும் என்னிடம் இல்லாத எந்த விஷ்யத்தையும் எடுத்துக் கூறி புகழ வேண்டாம். ஏனென்றால் அல்லாஹ் என்னை நன்கு அறிந்துள்ளான். மேலும் என்னை எடுத்துச் செல்லும்போது விரைவாக செல்லவும். எனக்கு அல்லாஹ்விடத்தில் நன்மை இருக்குமென்றால் நீங்கள் என்னை மிகவும் சிறந்தவற்றின் பக்கம் அனுப்புபவர்களாக இருப்பீர்கள். ஒருவேளை அதற்கு மாற்றமாக நான் இருந்தால் நீங்கள் சுமந்து வந்த அந்த தீமையை உங்களது தோள்களிலிருந்து இறக்கிக் கொள்ள இயலும்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 273 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இதுமட்டுமின்றி இந்த குறிப்பும் கிடைக்கின்றது. அதாவது என்னை கஸ்தூரி போன்றவற்றைக் கொண்டு நீராட்ட வேண்டாம் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வஸிய்யத் செய்திருந்தார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 279 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் சென்றேன். அப்போது அன்னாரின் தலை அன்னாரின் மகனான அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களின் தொடையில் இருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அன்னாரிடம் அதாவது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்களிடம் எனது கன்னத்தை நிலத்தில் வைத்து விடுவீராக என்று கூறினார்கள். அப்போது எனது தொடையும், நிலமும் ஒன்றே ஆகும் என்று ஹஸ்ரத் அப்துல்லாஹ் அவர்கள் கூறினார்கள். அதாவது இரண்டிற்கும் அதிக தொலைவு இல்லை என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், உமக்கு நன்மை உண்டாகட்டும். எனது கன்னத்தை நிலத்தில் வைத்து விடு என்று இரண்டாவது அல்லது மூன்றாவது முறை கூறினார்கள். பின்னர் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது கால்களை ஒன்றோடு ஒன்று இணைத்துக் கொண்டார்கள்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: பின்னர் நான் அன்னாரை அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை இவ்வாறு கூறக் கேட்டேன். அதாவது அல்லாஹ் ஒருவேளை என்னை மன்னிக்காவிட்டால் எனக்கும், எனது தாயாருக்கும் நாசம் உண்டாகட்டும் என்று கூறினார்கள். இறுதியில் அன்னாரின் மரணம் நிகழ்ந்து விட்டது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 274, 275 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சமாக் ஹன்ஃபி (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறியதை நான் கேட்டேன். நான் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம் இவ்வாறு கூறினேன். அதாவது அல்லாஹ் தங்களின் மூலமாக புதிய நகரத்தின் குடியேற்றத்தை செய்தான். தங்களின் மூலமாக ஏராளமான வெற்றிகள் கிடைத்தன. தங்களின் மூலமாக இன்ன இன்ன பணி நடந்துள்ளது. அதற்கு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அதாவது எனது ஆசை என்னவென்றால், இதன் மூலம் எனக்கு எந்த நற்கூலியும் வேண்டாம். எந்த சுமையும் வேண்டாம் என்ற நிலையில் நான் இரட்சிப்பு பெற விரும்புகின்றேன். அதாவது நான் பெரும் பெரும் பணிகளை செய்து விட்டேன். எனது காலத்தில் பெரும் வெற்றிகள் கிடைத்துள்ளன என்பதில் எனக்கு எந்த பெருமிதமும் இல்லை. மாறாக, அல்லாஹ்வின் அச்சமும், பயமும் மேலோங்கி இருக்க வேண்டும். மேலும் எனது முடிவைப் பற்றிய கவலையே இருந்தது.

ஸைத் பின் அஸ்லம் தனது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மரணத்தின் நேரம் அருகில் வந்தபோது அன்னார் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் அமாரத்தைப் பற்றி

என்னிடம் சந்தேகம் கொள்கின்றீர்கள். இறைவன் மீது ஆணையாக! எனக்கு இதுவே விருப்பமாக உள்ளது. நான் لَا عَلَيَّ وَلَا لِيَهْ என்ற நிலையிலேயே இரட்சிப்பு பெற விரும்புகின்றேன். எனக்கு எந்த தண்டனையும் வேண்டாம். எனக்கு எந்த நற்கூலியும் வேண்டாம். இந்த நிலையில் நான் இரட்சிப்பு பெற விரும்புகின்றேன்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 267 – ஸிக்ர் ஹிஜ்ர் உமர் பின் கத்தாப் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இது தொடர்பாக கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் போன்ற மனிதர் தனது வாழ்நாள் முழுவதுமே இஸ்லாமிய மார்க்கத்தைப் பற்றிய துன்பத்திலும், கவலையிலும் கழித்த மனிதராக இருந்தார்கள். அன்னார் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உயர்தரமான தியாகத்தை செய்திருந்தார்கள். செயல் ரீதியில் அன்னாரின் தியாகங்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் தியாகங்கள் வரை அடைந்திருக்கவில்லை தான். ஆயினும் எண்ணம் மற்றும் நிய்யத்தின் அடிப்படையில் அவை அனைத்தும் சமமாக இருந்தன. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மரணமடைந்தபோது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. இறைவன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மீது அருள் செய்வானாக. நான் பலமுறை அன்னாரை முந்துவதற்கு முயற்சி செய்தேன். ஆனால் ஒருபோதும் (என்னால்) வெற்றி பெற முடியவில்லை என்று அன்னார் (ரலி) கூறினார்கள்.

ஒரு முறை செல்வத்தை கொண்டு வாருங்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நான் பாதி செல்வத்தை கொண்டு சென்றேன். இன்று நான் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை முந்தி விடுவேன் என்று எண்ணம் கொண்டேன். ஆனால் எனக்கு முன்பாகவே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் அங்கு வந்தடைந்திருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அன்னாருக்கு உறவும் இருந்தது. அவர் வீட்டில் எதையும் விட்டு வைத்திருக்க மாட்டார் என்பதை அன்னார் (ஸல்) அவர்கள் அறிந்திருந்தார்கள். எனவே அபூபக்ரே! நீர் வீட்டில் எதனை விட்டு விட்டு வந்துள்ளீர்? என்று கேட்டார்கள். அதற்கு அன்னார் வீட்டில் இறைவனையும், தூதர் (ஸல்) அவர்களின் பெயரையும் விட்டு விட்டு வந்துள்ளேன் என்று கூறினார்கள். இவ்வாறு கூறிவிட்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அழுதார்கள். மேலும் அந்த நேரத்திலும் கூட என்னால் அன்னாரை முந்த முடியவில்லை என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: இவை அன்னாரின் தியாகங்களாக இருந்தன. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் (இதற்கு) முன்பும் (செல்வம்) கொடுத்து வந்தார்கள். ஆனால் ஒரு குறிப்பான சந்தர்ப்பம் வந்தபோது அனைத்தையும் கொண்டு வந்து வைத்து விட்டார்கள். ஒரு பக்கம் இப்படிப்பட்ட மக்கள் உள்ளனர். மற்றொரு பக்கம் தனது செல்வத்தின் பத்தில் ஒரு பகுதியை கூட தியாகம் செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்காத மக்களும் உள்ளனர். நாங்கள் திவாலாகி விட்டோம் என்று கூறுகின்றனர்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மரணமடைகின்றபோது மீண்டும் மீண்டும் அன்னாரின் கண்கள் கலங்கின. மேலும் இறைவா! நான் எந்தவொரு பரிசுக்கும் தகுதி படைத்தவன் இல்லை. நான் (உனது) தண்டனையிலிருந்து தப்பித்து விட வேண்டும் என்று மட்டுமே விரும்புகின்றேன் என்று கூறி வந்தார்கள்.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 10 பக்கம் 24)

பின்னர் நல்லடக்கம் மற்றும் ஜனாஸாவைக் குறித்து கூறப்பட்டுள்ளது. அன்னார் (ரலி) அவர்களின் மகன் ஹஸ்ரத் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் அன்னாரை நீராட்டினார்கள்.

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: மஸ்ஜிது நபவியில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஜனாஸா தொழுகை நடத்தப்பட்டது. ஹஸ்ரத் சுஹைப் (ரலி) அவர்கள் அன்னாரின் ஜனாஸா தொழுகையை தொழ வைத்தார்கள். அன்னாரின் ஜனாஸா தொழுகை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மேடை மற்றும் வளாகத்திற்கு மத்தியில் அமைந்திருந்த இடத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை கபரில் இறக்குவதற்காக ஹஸ்ரத் உஸ்மான் பின் அஃபான் (ரலி), சயீத் பின் ஸைது, சுஹைப் பின் ஸனான் மற்றும் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) ஆகியோர் உள்ளே இறங்கி இருந்தனர்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 279 – 281 ஃபி ஸிக்ர் இஸ்திஹ்லாஃப் உமர் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 166 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது))

இவர்களைத் தவிர்த்து ஹஸ்ரத் அலி (ரலி), ஹஸ்ரத் அப்துர் ரஹ்மான் பின் அவ்ஃப் (ரலி), ஹஸ்ரத் சஅத் பின் அபீ வக்காஸ் (ரலி), ஹஸ்ரத் தல்ஹா (ரலி) மற்றும் ஹஸ்ரத் சுபைர் பின் அவாம் (ரலி) ஆகியோரின் பெயர்களும் வருகின்றன.

(முஹம்மது ஹுஸைன் ஹேகல் அவர்கள் எழுதிய செய்யதுனா உமர் ஃபாரூக் அஃஸம் என்ற நூல் பக்கம் 867, 868 – லாஹூரிலுள்ள அச்சகத்தில் அச்சிடப்பட்டது & நுஃமானி ஷிப்லி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 169 – 1991 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நல்லடியார்களுக்கு அருகில் அடக்கம் செய்யப்படுவதும் ஓர் இறை அருட்கொடையாகும். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைக் குறித்து எழுதப்பட்டுள்ளது: மரண தருவாயில் அன்னார் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு இந்த செய்தியை கூறி அனுப்பினார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகிலுள்ள இடத்தை தனக்கு தரும்படி அன்னார் செய்தி கூறி அனுப்பினார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் தியாகத்தை மேற்கொண்டவாறு அந்த இடத்தை அன்னாருக்கு கொடுத்து விட்டார்கள். மேலும் مَا بَقِيَ لِي هَمٌّ بَعْدَ ذَٰلِكَ என்று கூறினார்கள். அதாவது இதற்குப் பிறகு எனக்கு எந்த துன்பமும் இல்லை. நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கபருக்கு அருகில் அடக்கம் செய்யப்படுகின்றேன் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

(மல்ஃபூஸாத் தொகுத 8 பக்கம் 286)

மற்றோர் இடத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: எந்த நபர் மிக உயர்ந்த ஆர்வத்துடன் அல்லாஹ்வுடன் தொர்புடையவராக ஆகி விடுகின்றாரோ அவரை அல்லாஹ் ஒருபோதும் வீணாக்க மாட்டான். முழு உலகமும் அவருக்கு எதிரியாகி விட்டாலும் சரியே. அல்லாஹ்வை வேண்டுபவர் எந்தவொரு பாதிப்பையும், தொல்லைகளையும் பொருட்படுத்துவதில்லை. அல்லாஹ் உண்மையாளர்களை ஆதரவற்றவர்களாக விட்டு விடுவதில்லை. அல்லாஹு அக்பர். அவர்கள் இருவரும் (ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) மற்றும் ஹஸ்ரத் உமர் (ரலி)) உண்மை மற்றும் தூய்மையின் உயர் அந்தஸ்தை பெற்றிருந்தார்கள். அவர்கள் இருவரும் அருளுக்குரிய இடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். எந்த அளவுக்கென்றால் மூஸாவும், ஈஸாவும் உயிருடன் இருந்திருந்தால் அங்கு அடக்கம் செய்யப்படுவதற்கு ஆசை கொண்டிருப்பார்கள். ஆனால் இந்த அந்தஸ்து வெறும் ஆசையால் கிடைக்க முடியாது. அதேபோன்று வெறும் எண்ணங்களால் கிடைத்து விட முடியாது. மாறாக இது கண்ணியத்திற்குரிய இறைவனின் சன்னிதானத்தில் கிடைக்கக் கூடிய நிரந்தரமான கருணையாகும். எவர்களின் பக்கம் இறை அருட்கொடை ஆரம்பம் முதலே கவனம் கொண்டுள்ளதோ அவர்களுக்கே இந்த கருணை கிடைக்க முடியும்.

(சிர்ருல் குலஃபா, ரூஹானீ கஸாயின் தொகுதி 8 பக்கம் 346, உருது தர்ஜுமா சிர்ருல் கிலாஃபா பக்கம் 78)

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மரணடைகின்ற நேரத்தில் அன்னார் இந்த விஷயத்திற்காக பெரிதும் துடிப்பை வெளிப்படுத்தினார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாதங்களில் அடக்கம் செய்யப்படுவதற்கு தமக்கு இடம் கிடைத்து விட வேண்டும் என்று விரும்பினார்கள். எனவே அன்னார் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அனுமதி வழங்கி விட்டால் என்னை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருகில் அடக்கம் செய்து விடுங்கள் என்று கூறி அனுப்பினார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எப்படிப்பட்ட மனிதராக இருந்தார்கள் என்றால் அன்னாரைக் குறித்து கிறிஸ்துவ வரலாற்றாசிரியர்களும் இவ்வாறு எழுதுகின்றனர்: வேறு எவரும் செய்திராத ஆட்சியை அன்னார் உலகில் செய்தார்கள். அவர்கள் (கிறிஸ்துவ வரலாற்றாசிரியர்கள்) ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏசிப் பேசுகின்றார்கள். அதாவது கிறிஸ்துவ வரலாற்றாசிரியர்கள். ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் புகழ்ந்து பேசுகின்றார்கள். எப்போதும் தோழமையில் இருந்தவ அதுபோன்ற நபர் மரண நேரத்தில் தனக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாதங்களில் இடம் கிடைத்து விட வேண்டும் என்று ஏக்கம் கொள்கின்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோழமையில் இருந்த நபர் மரணத்தின்போதும் தமக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பாதங்களில்

இடம் கிடைத்து விட வேண்டும் என்று ஏக்கம் கொள்கின்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஏதாவதொரு செயலிலிருந்து அன்னார் இறைவனின் திருப்திக்காக பணி செய்யவில்லை என்பது வெளிப்பட்டிருக்கும் என்றால் உமர் போன்ற உயர் அந்தஸ்தை அடைந்திருந்த நபர் அன்னார் (ஸல்) அவர்களின் பாதங்களில் இடம் கிடைத்து விட வேண்டும் என்று எப்போதாவது ஆசை கொள்வாரா?

(துன்யா கா முஹ்ஸின், அன்வாருல் உலூம் தொகுதி 10 பக்கம் 262)

எனவே இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர் அந்தஸ்தாகும். அதன் காரணமாக அன்னார் (ஸல்) அவர்களின் பாதங்களில் தமக்கு இடம் கிடைத்து விட வேண்டும் என்று ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களும் ஆசை கொண்டார்கள்.

**ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மரணம்:**

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மரணமடையும்போது அன்னாரின் வயது என்ன? இது தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் உள்ளன. பிறந்த வருடத்தை குறித்தும் பல்வேறு அறிவிப்புகள் உள்ளன. எனவே அன்னார் (ரலி) அவர்களின் மரணத்தின் நேரத்தில் வயதைக் குறித்தும் பல்வேறு அறிவிப்புகள் உள்ளன.

தபரி வரலாறு, அஸதுல் காபா, அல்பதாயா வன் நஹாயா, ரியாலுன் நஸ்ரா, தாரீகுல் குலஃபா ஆகிய நூல்களின் பல்வேறு அறிவிப்புகளில் அன்னாரின் வயது 53 என்றும், 55 என்றும், 56 என்றும், 59 என்றும், 61 என்றும், 63 என்றும், 65 என்றும் கூறப்பட்டுள்ளது.

(தாரீக் தப்ரி தொகுதி 3 பாகம் 1 பக்கம் 211 – 2003 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 166 – பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது & அல்பதாயா வன் நஹாயா பக்கம் 192 – 194 – 1998 ஆம் ஆண்டு தாருல் ஹிஜ்ரில் அச்சிடப்பட்டது & ரியாஸுன் நஸர் பக்கம் 418, 419 – பைரூத்திலுள்ள தாருல் மஃரூஃபாவில் அச்சிடப்பட்டது & இமாம் ஜலாலுத்தீன் சுயூத்தி அவர்கள் எழுதிய தாரீகுல் குலஃபா என்ற நூல் (தர்ஜுமா) பக்கம் 168 – லாஹூரிலுள்ள மும்தாஜ் அகாடமியில் அச்சிடப்பட்டது)

எனினும் சஹீஹ் முஸ்லிம் மற்றும் திர்மிதியின் அறிவிப்பிற்கேற்ப அன்னாரின் வயது 63 என்று கூறப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: மரணத்தின்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வயது 63 ஆக இருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் வயது 63 ஆக இருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மரணத்தின் நேரத்தில் அன்னாருக்கு வயது 63 ஆக இருந்தது.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஃபஸாயில்... ஹதீஸ் எண் 6091 & சுனன் திர்மிதி, கிதாபுல் மனாகிப்... ஹதீஸ் எண் 3653)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மரணத்தின்போது சில சஹாபா பெருமக்களின் தாக்கங்களைக் குறித்தும் கூறப்பட்டுள்ளது. ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அருளுக்குரிய உடல் ஜனாஸாவிற்காக வைக்கப்பட்டது. மக்கள் அன்னாரை சுற்றி நின்று கொண்டிருந்தனர். அன்னாரை சுமப்பதற்கு முன் துஆ செய்யத் தொடங்கினர். பின்னர் ஜனாஸா தொழுகையை தொழுதனர். நானும், அவர்களுடன் இருந்தேன். அப்போது ஒரு நபர் எனது தோளை பிடித்து என்னை அசைத்தார். அவர் ஹஸ்ரத் அலி பின் அபீ தாலிப் ஆக இருந்தார் என்பதை நான் கண்டேன். அன்னார் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கருணைக்காக துஆ செய்தார்கள். மேலும் நான் அவரது செயல்களைப் போன்று செயலாற்றி அல்லாஹ்வை சந்திக்கின்ற வகையில் எனக்கு நேசத்திற்குரியவராக திகழும் எந்தவொரு நபரையும் அன்னார் விட்டு விட்டுச் செல்லவில்லை. இறைவன் மீது ஆணையாக! அல்லாஹ் அன்னாரையும், அன்னாரின் தோழர்களுடனேயே வைப்பான் என்று நான் நம்புகின்றேன். அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை அன்னாரின் தோழர்களுடனேயே அல்லாஹ் வைப்பான். மேலும் நான் நன்கு அறிவேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பல முறை,

ذَهَبْتُ أَنَا وَأَبُو بَكْرٍ وَعُمَرُ، وَدَخَلْتُ أَنَا وَأَبُو بَكْرٍ

وَعُمَرُ وَخَرَجْتُ أَنَا وَأَبُو بَكْرٍ وَعُمَرُ

என்று கூறி வந்ததை நான் செறியேற்றுள்ளேன். அதாவது நானும், அபூபக்ரும், உமரும் சென்றோம். நானும், அபூபக்ரும், உமரும் நுழைந்தோம். நானும், அபூபக்ரும், உமரும் வெளியேறினோம் என்று அன்னார் கூறினார்கள்.

(சஹீஹ் புகாரி, கிதாபுல் ஃபஸாயிலுன் நபி (ஸல்), பாப் மனாகிப் உமர் பின் கத்தாப், ஹதீஸ் எண் 3685)

பல்வேறு சம்பவங்களை எடுத்துரைத்தவாறு அன்னார் (ஸல்) அவர்கள் இந்த வாக்கியங்களை கூறி இருந்தார்கள்.

ஜஃபர் பின் முஹம்மது தமது தந்தையிடமிருந்து அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்களை நீராட்டி கஃபன் அணிவித்து அன்னாரை கட்டிலில் வைத்தபோது ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அன்னாருக்கு அருகில் நின்று கொண்டு அன்னாரை புகழ்ந்து பேசினார்கள். மேலும் அல்லாஹ்வின் மீது ஆணையாக! இந்த போர்வையால் மூடப்பட்டுள்ள மனிதரை விட பூமியில் எனக்கு வேறு எந்த நபரும் விருப்பத்திகுரியவர் இல்லை. நான் அவருடைய செயல் பட்டியலுடன் இறைவனை சந்திப்பதற்கு! என்று கூறினார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா லி இப்னு சஅத் தொகுதி 3 பக்கம் 282, ஸிக்ர் ஹிஜ்ரத் உமர் பின் கத்தாப் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அபூமஹ்லத் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அலி பின் அபீ தாலிப் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடைந்திருக்கவில்லை. அப்போது அன்னார் (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எங்களில் மிகச் சிறந்தவர் ஆவார் என்பதை நாங்கள் அறிந்து கொண்டோம். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மரணமடைந்திருக்கவில்லை. அப்போதே நாங்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்குப் பிறகு எங்களில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களே எல்லாரையும் விட மிகச் சிறந்தவர் ஆவார் என்பதை நாங்கள் அறிந்து கொண்டோம்.

(இப்னு ஜூஸி அவர்கள் எழுதிய சீரத் உமர் பின் கத்தாப் என்ற நூல் பக்கம் 212)

சைது பின் வஹப் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி) அவர்களிடம் சென்றோம். அன்னார் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் நற்குறிப்பை செய்தவாறு எந்த அளவுக்கு அழுதார்கள் என்றால் அன்னாரின் கண்ணீர் விழுந்து கூழாங்கற்களும் ஈரமாகி விட்டன. பின்னர் அன்னார் கூறினார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்திற்கு மாபெரும் கோட்டையாக இருந்தார்கள். மக்கள் அதில் நுழைந்த பிறகு வெளியேற மாட்டார்கள். ஒரு வலிமை வாய்ந்த கோட்டையாக இருந்தார்கள். மக்கள் அதனுள் நுழைந்தார்கள். ஆனால் வெளியேறவில்லை. அன்னாரின் மரணம் நிகழ்ந்தபோது அந்த கோட்டையில் விரிசல் உண்டாகி விட்டது. மக்கள் இஸ்லாத்தை விட்டு வெளியேறுகின்றார்கள்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 283 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அபூவாயில் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் அறிவை தராசின் ஒரு தட்டிலும், மீதமுள்ள மற்ற அனைவரின் அறிவை மற்றொரு தட்டிலும் வைத்தால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் தராசு தட்டு தான் எடை கொண்டதாக இருக்கும்.

அபூவாயில் கூறினார்: நான் இதனைக் குறித்து இப்ராஹீமிடம் குறிப்பிட்டேன். இறைவன் மீது ஆணையாக! அப்படித்தான் என்று அன்னார் கூறினார்கள்.

அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி) அவர்கள் இதை விட முன்னேறிச் சென்று கூறினார். என்ன கூறினார்? என்று நான் கேட்டேன். அதற்கு அன்னார் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மரணம் நிகழ்ந்தபோது அறிவின் பத்து பங்கில் ஒன்பது பங்குகள் சென்று விட்டன என்று அன்னார் கூறினார்கள்.

(அஸதுல் காபா ஃபீ மஃரூஃபத்துஸ் சஹாபா தொகுதி 3 பக்கம் 651, உமர் பின் கத்தாப் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஷஹாதத் நிகழ்ந்தபோது ஹஸ்ரத் அபூதல்ஹா (ரலி) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அரபு நாட்டில் பாதிப்படையாத எந்தவொரு நகர்ப்புற வீடும் அல்லது காட்டரபியின் வீடும் இருக்கவில்லை. அதாவது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஷஹாதத்தால் அவர்கள் அனைவருக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 285 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்னார் (ரலி) எப்போதும் உதவி செய்து வந்தார்கள். நிச்சயமாக அவர்களுக்கு பாதிப்பு ஏற்படும். இந்த மக்கள் தாக்கத்திற்கு உள்ளாவார்கள்.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் ஸலாம் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் ஜனாஸாவிற்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கட்டிலுக்கு அருகில் நின்று கொண்டு கூறினார்கள்: உமரே! நீங்கள் மிகவும் சிறந்த இஸ்லாமிய சகோதரராக இருந்தீர்கள். உண்மையில் வள்ளலாகவும், பொய்க்கு கருமியாகவும் இருந்தார்கள். திருப்தியை வெளிப்படுத்தும் நேரத்தில் அன்னார் திருப்தி கொண்டிருந்தார்கள். கோபத்தின் நேரத்தில் அன்னார் (ரலி) கோபமடைந்திருந்தார்கள். தூய பார்வையும், உயர் சிந்தனையும் கொண்ட மனிதராக அன்னார் இருந்தார்கள். தேவையின்றி புகழ்பவராக அன்னார் இருக்கவில்லை. அதேபோன்று அன்னார் புறம்பேசக் கூடியவராகவும் இருக்கவில்லை.

(அத்தப்காத்துல் குப்ரா லி இப்னு சஅத் தொகுதி 3 பக்கம் 282, ஸிக்ர் ஹிஜ்ரத் உமர் பின் கத்தாப் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மரணத்தின்போது ஹஸ்ரத் சயீத் பின் ஸைது அவர்கள் அழுதார்கள். அப்போது ஒருவர் يَا اَبَا الْاَعْوَر! தாங்கள் ஏன் அழுகின்றீர்கள்? என்று கேட்டார். அதற்கு நான் இஸ்லாத்தின் மீது அழுகின்றேன் என்று கூறினார்கள். நிச்சயமாக ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மரணத்தால் இஸ்லாத்தில் எப்படிப்பட்ட விரிசல் ஏற்பட்டுள்ளதென்றால் அது கியாமத் வரை முழுமை செய்ய முடியாது.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 284 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையிலேயே இவ்வாறு கூறி வந்தோம். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமுதாயத்தில் அன்னார் (ஸல்) அவர்களுக்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் எல்லாரையும் விட சிறந்தவராக இருக்கின்றார்கள். அதன் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், அதன் பிறகு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஆவார்கள் என்று நாங்கள் கூறி வந்தோம்.

(சுனன் அபீ தாவூது, கிதாபுஸ் சுன்னா, பாப் ஃபித்தஃப்ஸீல் ஹதீஸ் எண் 4628)

ஹஸ்ரத் ஹுதைஃபா (ரலி) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் இஸ்லாத்தின் உதாரணம் தொடர்ந்து முன்னேற்றத்தின் வழியில் நிலை பெற்றிருக்கும் நபரின் உதாரணமாக இருந்தது. அன்னார் (ரலி) அவர்களின் ஷஹாதத் நிகழ்ந்தபோது அந்த நபர் மிகத் தொலைவில் முகம் திரும்பிக் கொண்டார். மேலும் தொடர்ந்து பின்நோக்கி சென்று கொண்டிருந்தார்.

(அத்தப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 285, ஸிக்ர் இஸ்திஹ்லாஃப் உமர் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மனைவிகள் மற்றும் பிள்ளைகளைக் குறித்தும் கூறப்பட்டுள்ளன. அன்னார் (ரலி) அவர்களுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் 10 மனைவிமார்கள் இருந்தார்கள். அவர்கள் மூலமாக 9 மகன்களும், 4 மகள்களும் இருந்தனர். அந்த பிள்ளைகளில் ஒருவர் ஹஸ்ரத் ஹஃப்ஸா (ரலி) அவர்களும் ஆவார்கள். அன்னாருக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய்மையான மனைவியாக ஆகுவதற்கும் நற்பேறு கிடைத்தது. ஹஸ்ரத் ஸைனப் பின்த் மழ்ஊன் (ரலி) அவர்கள் முதல் மனைவியாக இருந்தார்கள். அன்னார் ஹஸ்ரத் உஸ்மான் பின் மழ்ஊன் (ரலி) அவர்களின் சகோதரியாக இருந்தார்கள். அன்னாரின் மூலமாக அன்னாருக்கு அப்துல்லாஹ், அப்துர் ரஹ்மான் அக்பர் மற்றும் ஹஸ்ரத் ஹஃப்ஸா ஆகிய பிள்ளைகள் பிறந்தன.

ஹஸ்ரத் உம்மே குல்ஸூம் பின்த் அலி பின் அபூ தாலிப்: அன்னாரின் மூலமாக அன்னாருக்கு ஸைதா அக்பர் மற்றும் ருகய்யா போன்ற பிள்ளைகள் இருந்தனர்.

முலைகா பின்த் ஜர்வல்: அன்னாரை உம்மே குல்ஸூம் என்று கூறுவார்கள். அன்னாரின் மூலமாக ஸைதா அஸ்கர் மற்றும் உபைதுல்லாஹ் போன்ற பிள்ளைகள் இருந்தனர்.

குரைபா பின்த் அபூஉமைய்யா மஹ்ஸூமீ, முலைகா பின் குரைபா ஆகியோர் ஈமான் கொண்டிருக்கவில்லை. எனவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹிஜ்ரி 6 ஆம் ஆண்டில் அவர்கள் இருவரையும் தலாக் கொடுத்து விட்டார்கள்.

ஹஸ்ரத் ஜமீலா பின்த் சாபித்: அன்னாரின் பெயர் ஆஸியா ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை மாற்றி ஜமீலா என்று பெயர் வைத்தார்கள். அன்னார் பத்ரி சஹாபியான ஆஸிம் பின் சாபித் (ரலி) அவர்களின் சகோதரியாக இருந்தார்கள். அன்னாரின் மூலமாக அன்னாருக்கு ஆஸிம் என்ற பிள்ளை இருந்தார்.

லுஹைய்யாவிடமிருந்து அன்னாரின் பிள்ளையாக அப்துர் ரஹ்மான் அவ்ஸத் இருந்தார்.

மற்றோர் மனைவி தொடர்பாக இவ்வாறு கூறப்படுகின்றது. அதாவது உம்மே வலத் அதாவது திருமணம் செய்து கொள்ளப்பட்ட அடிமைப் பெண்மணி. அவருக்கு பிள்ளைகள் பிறந்தால் பின்னர் அவர் விடுதலையாகி விடுவார்.

மற்றோர் அடிமை இருந்தார். அன்னாரின் வயிற்றில் அப்துர் ரஹ்மான் அஸ்கர் பிறந்தார்.

ஹஸ்ரத் உம்மே ஹகீம் பின்த் ஹாரிஸ் அவர்கள் மூலமாக அன்னாருக்கு ஃபாத்திமா என்ற பிள்ளை இருந்தது.

ஃபுகையாவின் மூலமாக அன்னாருக்கு ஸைனப் என்ற பிள்ளையும் இருந்தது.

ஹஸ்ரத் ஆதிகா பின்த் ஸைத்: அன்னாரின் மூலமாக அயாஸ் என்ற பிள்ளை அன்னாருக்கு இருந்தது.

(நுஃமானி ஷிப்லி அவர்கள் எழுதிய அல்ஃபாரூக் என்ற நூல் பக்கம் 404 – 1991 ஆம் ஆண்டு கராச்சியிலுள்ள தாருல் இஷாஅத்தில் அச்சிடப்பட்டது & அஸதுல் காபா தொகுதி 7 பக்கம் 53 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & முஹம்மது ரஸா அவர்கள் எழுதிய அல்குலஃபாவுர் ராஷிதூன் பக்கம் 100 – 2004 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது)

மிகவும் பிரபலமான ஐரோப்பிய வரலாற்றாசிரியரான எட்வர்ட் கபன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களைப் புகழ்ந்தவாறு எழுதுகின்றார்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் இறையச்சமும், பணிவும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் நன்மைகளுக்கு குறைவானதாக இருக்கவில்லை. அன்னார் (ரலி) அவர்களின் உணவாக பார்லி ரொட்டியும், பேரீத்தம் பழங்களுமே இருந்தன. தண்ணீர் அன்னாரின் பானமாக இருந்தது. அன்னார் (ரலி) அவர்கள் 12 இடங்களில் ஒட்டுப்போடப்பட்ட மேலங்கியுடன் மக்களுக்கு தப்லீக் செய்தார்கள். ஈரானிய கவர்னர் இந்த வெற்றியாளருக்கு பாராட்டை தெரிவித்தபோது அன்னார் (ரலி) அவர்கள் மஸ்ஜித் நபவியின் ஏணிப்படிகளில் யாசகர்களைப் போன்று தூங்கிக் கொண்டிருப்பதை அவர் கண்டார். சுதந்திர சிந்தனையாளர்களின் பார்வையில் பொருளாதாரம் ஊற்றாக இருக்கின்றது. நல்லடியார்களின் கடந்த கால மற்றும் நிகழ் கால தொண்டுகளின் காரணமாக அவர்களுக்கு உதவித் தொகைக்கான நீதியான மற்றும் நிரந்தரமான அமைப்பை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உருவாக்கினார்கள். மேலும் அன்னார் (ரலி) சுயமே உதவித் தொகையிலிருந்து தேவையற்றவராக இருந்தார்கள். (ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சிறிய தந்தை) அப்பாஸ் அவர்களுக்கு அன்னார் (ரலி) அவர்கள் முதன் முதலிலும் தேவைக்கேற்பவும் 50000 திர்ஹம் அல்லது வெள்ளித் துண்டுகளை உதவித் தொகையாக நிர்ணயித்தார்கள். பத்ர் போரில் பங்கு பெறக்கூடிய சஹாபா பெருமக்களில் ஒவ்வொருவருக்கும் 5000 திர்ஹமை உதவித் தொகையாக நிர்ணயித்தார்கள். முஹம்மது (ஸல்) அவர்களின் ஏனைய சஹாபிகளுக்கு 3000 வெள்ளித் துண்டுகளை ஆண்டு பரிசாக அன்னார் வழங்கினார்கள்.

(The decline and fall of the Roman empire by Edward Gibbon Vol.3 Chapter L1 Page 178 - London)

The Hundred என்ற தனது நூலில் மைக்கல் H.ஹார்ட் என்பவர் 100 செல்வாக்குமிக்க நபர்களின் பெயர்களை குறிப்பிட்டுள்ளார். முதலிடத்தில் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களையே வைத்துள்ளார். இந்நூலில் 52 வது இடத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை குறிப்பிட்டுள்ளார். அவர் இவ்வாறு எழுதுகின்றார்: உமர் பின் கத்தாப் அவர்கள் முஸ்லிம்களில் இரண்டாவது கலீஃபாவாகவும், ஏறத்தாழ முஸ்லிம்களின் மிகவும் மகத்துவமிக்க கலீஃபாவாகவும் இருந்தார்கள். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் சம வயதைக்


**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad
(Ameer, Melapalayam)



**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam
(Melapalayam)

கொண்டவராகவும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் போன்று மக்காவிலேயே அன்னாரும் பிறந்தார்கள். அன்னாரின் பிறந்த வருடம் தெரியவில்லை. ஆயினும் கி.பி. 586 க்கு அருகிலுள்ள காலமாக இருக்கக்கூடும். தொடக்கத்தில் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) மற்றும் அன்னாரின் புதிய மார்க்கத்தின் மிகவும் கடுமையான எதிரிகளைச் சார்ந்தவராக ஹஸ்ரத் உமர் (ரலி) இருந்தார்கள். இருந்தபோதிலும் திடீரென உமர் (ரலி) அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டார். அதன் பிறகு மிக வலிமை வாய்ந்த உதவியாளர்களைச் சார்ந்தவராக ஆகி விட்டார்கள்.

புனித பவுல் கிறிஸ்தவரானதுடன் அதன் ஒப்புமை ஆச்சரியத்திற்குரியதாகும். உமர் (ரலி) அவர்களும் முஹம்மது (ஸல்) அவர்களின் மிக நெருங்கிய ஆலோசகர்களை சார்ந்தவராக இருந்தார்கள். அன்னார் (ஸல்) அவர்களின் மரணம் வரை அவ்வாறே இருந்து வந்தார்கள். கி.பி. 632 ஆம் ஆண்டில் முஹம்மது (ஸல்) அவர்கள் தனது பிரதிநிதியை நியமிக்காமலேயே மரணமடைந்து விட்டார்கள். உமர் (ரலி) அவர்கள் உடனடியாக அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத்திற்கு ஆதரவு அளித்தார்கள். அபூபக்ர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நெருங்கிய தோழராகவும், மாமனாராகவும் இருந்தார்கள். அதன் காரணமாக அதிகாரத்திற்கான போட்டி தவிர்க்கப்பட்டது.

நூலாசிரியர் தமக்கே உரித்தான பாணியில் இதனை எழுதியுள்ளார். மக்கள் ஒன்றுகூடி அன்னார் (ரலி) அவர்களை எவ்வாறு கலீஃபாவாக தேர்ந்தெடுத்தார்கள் என்பதை ஒப்புக் கொள்ள அவர் தயாராக இல்லை. ஆனால் எவ்வாறிருப்பினும் அவர் உலகியல் பார்வையில் பார்த்தவாறு அன்னாரின் மாமனாரிடம் பைஅத் செய்யப்பட்டது. அதனால் அதிகாரப்போட்டி தவிர்க்கப்பட்டு விட்டது என்று கூறுகின்றார். இதன் மூலம் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் முதல் கலீஃபாவாக ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு தகுதி பெற்றார்கள் என்று அவர் கருதுகின்றார். அதாவது ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் பிரதிநிதியாக ஆனார்கள். அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒரு வெற்றிகரமான தலைவராக இருந்தார்கள். ஆயினும் அன்னார் இரண்டு வருடங்கள் வரையே கலீஃபாவாக தொண்டாற்றினார்கள். அதன் பிறகு மரணித்து விட்டார்கள். ஆனால் அன்னார் தமக்குப் பிறகு குறிப்பாக உமர் (ரலி) அவர்களை தமது பிரதிநிதியாக நியமனம் செய்தார்கள். உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மாமானாராக இருந்தார்கள். இதன் காரணமாக மீண்டும் ஒரு முறை அதிகாரத்திற்கான போட்டி தவிர்க்கப்பட்டது.

பின்னர் மீண்டும் இவர் இதற்கு உலகியல் வடிவம் கொடுக்க விரும்புகின்றார். எவ்வாறிருப்பினும் அவர் புகழவும் செய்கின்றார். உமர் கி.பி. 634 ஆம் ஆண்டில் கலீஃபாவாக ஆனார்கள். கி.பி. 644 வரை அதிகாரத்தில் அதாவது கிலாஃபத் பதவியில் இருந்தார்கள். அன்னாரை ஒரு பாரசீக அடிமை மதீனாவில் ஷஹீதாக்கி விட்டான். மரண படுக்கையில் உமர் (ரலி) அவர்கள் 6 நபர்களைக் கொண்ட ஒரு கமிட்டியை நியமித்தார்கள். அந்த கமிட்டி அன்னாரின் பிரதிநிதியை தேர்ந்தெடுப்பதற்காக நியமிக்கப்பட்டது. இந்த முறை மீண்டும் ஒரு முறை அதிகாரத்திற்கான ஆயுதம் ஏந்திய போர் தவிர்க்கப்பட்டது. இந்த கமிட்டி உஸ்மான் (ரலி) அவர்களை மூன்றாவது கலீஃபாவாக நியமித்தது. அன்னார் 644 முதல் 656 வரை ஆட்சி செய்தார்கள்.

அடுத்து அவர் இவ்வாறு எழுதுகின்றார்: ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் 10 ஆண்டு கிலாஃபத் காலகட்டத்தில் தான் அரேபியர்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த பெற்றிகளை பெற்றனர். அன்னார் (ரலி) அவர்களின் கிலாஃபத்தின் குறுகிய காலத்திலயே அரேபிய படை சிரியா மற்றும் பாலஸ்தீன் மீது தாக்குதல் தொடுத்தது. அந்த இடங்கள் அந்த நேரத்தில் பாஸன்தீனிய அரசாட்சியின் அங்கமாக இருந்தன. 636 ஆம் ஆண்டில் யர்மூக் போரில் அரபிகள் பாஸன்தீன படைகளுக்கு எதிரில் எப்படிப்பட்ட வெற்றியை பெற்றது என்றால் அவர்களில் இடுப்பு முறிந்து விட்டது. டமாஸ்கஸும் அந்த ஆண்டிலேயே வெற்றி கொள்ளப்பட்டது. ஜெருஸலேமும் இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு ஆயுதங்களை கீழே போட்டு விட்டது. கி.பி. 641 ற்குள் அரேபிகள் முழு பாலஸ்தீனத்தையும், சிரியாவையும் வெற்றி கொண்டு விட்டார்கள். தற்போதைய காலத்து துருக்கியில் அவர்கள் முன்னேறிக் கொண்டிருந்தார்கள். கி.பி. 639 ல் அரேபிய படைகள் எகிப்தில் நுழைந்து விட்டன. அதுவும் பாஸன்தீன் அரசாங்கத்திற்கு கீழேயே இருந்தது. மூன்று ஆண்டுகளுக்குள்ளேயே முழுமையாக அரேபிகள் எகிப்தை வெற்றி கொண்டு விட்டனர். ஈராக்கில் பாரசீகர்களின் ஸாஸானி அரசாங்கத்தின் ஓர் அங்கமாக இருந்த ஈராக்கின் மீது அரேபியர்கள் தாக்குதல் நடத்தினர். அது ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கிலாஃபத் அரியணையில் அமர்வதற்கு முன்பாகவே துவங்கி இருந்தது. அரேபியர்களின் பெரிய வெற்றி கி.பி. 637 ல் காதிஸிய்யா போரின் வெற்றியின் வடிவில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் நிகழ்ந்தது. கி.பி. 641 ற்குள் முழு ஈராக்கும் அரேபியர்களின் கட்டுப்பாட்டில் வந்திருந்தது. மேலும் இத்துடன் நின்று விடவில்லை. அரேபிய படைகள் பாரசீகத்தின் மீதும் தாக்குதல் நடத்தியிருந்தன. நிஹாவந்த் போரில் கி.பி. 642 ல் ஸாஸானி அரசாங்கத்தின் இறுதி அரசர்களின் படையை அரேபிகள் மிகவும் மோசமான முறையில் தோற்கடித்திருந்தார்கள்.

உமர் அவர்களின் மரணம் நிகழ்ந்தபோது அதாவது கி.பி. 644 ஆம் ஆண்டு மேற்கு ஈரானின் பெரும்பான்மையான பகுதி முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்திருந்தது. ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் மரணமும் கூட அரேபிய படைகளின் உத்வேகத்தை தணித்து விடவில்லை. கிழக்கில் அவர்கள் வெகு விரைவாக பாரசீகத்தின் வெற்றியை முழுமை செய்திருந்தார்கள். அதே நேரம் மேற்கில் வடக்கு ஆப்ரிக்காவிலும் முன்னேறிக் கொண்டு சென்றார்கள்.

தொடர்ந்து நூலாசிரியர் எழுதுகின்றார்: எந்த அளவிற்கு உமர் (ரலி) அவர்களின்பரந்துபட்ட வெற்றிகளுக்கு முக்கியத்துவம் உள்ளதோ அதே அளவில் அந்த வெற்றிகளின் ஸ்திரத்தன்மையும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஈரானிய குடிமக்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டு விட்டனர் என்ற போதிலும் இறுதியில் அவர்கள் அரேபியர்களின் ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றுக் கொண்டனர். ஆனால் சிரியாவும், ஈராக்கும், எகிப்தும் அவ்வாறு செய்யவில்லை. அவர்கள் முழுவதுமாக அரபு நாகரீகத்தை மேற்கொண்டு விட்டனர். மேலும் இன்று வரை இதே நிலை தான் தொடர்கின்றது.

பின்னர் நூலாசிரியர் எழுதுகின்றார்: சந்தேகத்திற்கிடமின்றி அன்னாரின் படைகள் பெற்ற ஒரு மகத்துவமிக்க அரசாங்கத்தை நிர்வகிப்பதற்காக உமர் (ரலி) அவர்களுக்கு சில பாலிஸிகளை உருவாக்க நேரிட்டது. ஒரு சிறப்பு வாய்ந்த இராணுவ அந்தஸ்து அரேபிகளுக்கு கிடைக்க வேண்டுமென்றும், அவர்கள் உள்ளூர் வாசிகளிலிருந்து தனித்து இராணுவ முகாம்களில் வசிக்க வேண்டுமென்றும் முடிவெடுத்தார்கள். ஆளுமையின் கீழுள்ள மக்களுக்கு தமது முஸ்லிம் வெற்றியாளர்களுக்கு ஒரு ஜிஸ்யா வரி கொடுக்க நேரிட்டது. மற்றபடி அவர்களுக்கு முழுமையான அமைதியும், பாதுகாப்பும் கிடைத்திருந்தது. இதைத்தவிர்த்து அவர்கள் மீது எந்த பொறுப்பும் சுமத்தப்படவில்லை. குறிப்பாக இஸ்லாத்தை ஒப்புக் கொள்ளும்படி அவர்களை யாரும் நிர்பந்திக்கவில்லை.

மேற்குறிப்பிட்ட விஷயங்களிலிருந்து இது நிரூபணமாகின்றது. அதாவது அரேபியர்களின் திட்டங்கள் புனித போர்களை விட சமுதாய வகையான திட்டங்களாக இருந்தன. நிச்சயமாக மார்க்க காரணிகள் முழுமையாக மறைந்து விடவில்லை. சந்தேகத்திற்கிடமின்றி உமர் (ரலி) அவர்களின் வெற்றிகள் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாகும். முஹம்மது (ஸல்) அவர்களுக்குப் பிறகு இஸ்லாத்தை பரப்புவதில் அன்னார் (ரலி) அவர்கள் தனித்துவம் வாய்ந்த நபராக இருந்தார்கள். மேலும் அன்னாரின் வேகமான வெற்றிகளை தவிர்த்து விட்டால் இஸ்லாம் இன்று உலகில் எந்த அளவிற்கு பரவியுள்ளதோ அது சாத்தியமற்றதாக இருந்திருக்கும். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் வெற்றி கொள்ளப்பட்ட பகுதிகள் இன்று வரை அரேபியர்களிடமே உள்ளன. சந்தேகத்திற்கிடமின்றி முஹம்மது (ஸல்) அவர்கள் மிக முக்கிய நபராக இருந்தார்கள். அன்னாருக்கே மிக அதிகமான முன்னேற்றத்திற்கான அந்தஸ்து வழங்கப்படுகிறது. ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் பங்கை புறக்கணிப்பது மிகவும் தவறாக அமையும். அன்னார் (ரலி) அவர்களின் வெற்றிகள் முஹம்மது (ஸல்) அவர்களின் தாக்கத்தின் கீழ் இருந்ததன் காரணமாக அது நடந்தது. விளைவு சுயமாகவே வெளிப்பட்டு விடவில்லை. சில பரப்பளவு நிச்சயிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களின் சீர்மிகு தலைமையில் கிடைத்த அசாதாரண எல்லைகள் அப்படியிருக்கவில்லை.

தொடர்ந்து அவர் எழுதுகின்றார்: மேற்கத்திய நாடுகளில் அறியப்படாத நபராக இருக்கின்ற உமர் (ரலி) அவர்களுக்கு

**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad (Naib Sec.Maal, Melapalayam)

Charlemagne மற்றும் ஜூலியஸ் ஸீஸர் போன்ற மிகவும் பிரபலமான நபர்களை விட உயர்ந்த அந்தஸ்து வழங்குவது ஆச்சரியமாக இருக்கக்கூடும். இருந்தபோதிலும் உமர் (ரலி) அவர்களின் காலத்தில் அரேபியர்கள் பெற்ற வெற்றிகள் சாலிமேன் மற்றும் ஜூலி ஸீஸருக்கு எதிரில் அளவு மற்றும் காலத்தின் அடிப்படையில் மிக அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

(The Hundred: A Ranking of the most influential persons in History by H. Michael . Hart pages 275271. Bhd Golden Books centre sdnto, 2008)

அடுத்து Philip K.Hitti என்ற பேராசிரியர் History of the Arabs என்ற தமது நூலில் இவ்வாறு எழுதுகின்றார்: எளிமையான, போதுமென்ற மனம் படைத்த மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுறுசுறுப்பான, திறமை படைத்த பிரதிநிதியான ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் உயரமானவராகவும், வலிமையான உடல் அமைப்பை கொண்டவராகவும், தலையில் குறைவான முடியை கொண்டவராகவும் இருந்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் கிலாஃபத்திற்குப் பிறகு சிறிது காலம் வரை வியாபாரம் மூலமாக வாழ்க்கையை கழிக்க முயற்சி செய்து வந்தார்கள். அன்னார் (ரலி) அவர்கள் தமது முழு வாழ்நாளையும் ஒரு சாதாரண மனிதரைப் போன்று எளிமையான வாழ்க்கையை வாழ்ந்தார்கள். உண்மையில் அந்த உமர் அல்லது அவரின் பெயர் முஸ்லிம் அறிவிப்புகளுக்கேற்ப இஸ்லாத்தின் துவக்க காலத்தில் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு பிறகு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் அன்னாரின் இறையச்சம், நீதி மற்றும் எளிமையை ஒரு முன்னுதாரணமாக எடுத்துரைத்துள்ளார்கள். கலீஃபாவின் சிறம்பம்சங்களில் காணப்படும் அனைத்து சிறப்புகளையும் முன் வைத்துள்ளார்கள்.

அடுத்து அவர் எழுதுகின்றார்: அன்னார் (ரலி) அவர்களின் மிக உயர்ந்த அனைத்து நற்பண்புகளும் மனசாட்சி கொண்ட எல்லா நபர்களுக்கு பின்பற்றத்தக்க முன்னுதாரணமாக ஆகி விட்டன. அன்னார் (ரலி) அவர்களிடத்தில் ஒரேயொரு கீழாடையும், மேலங்கியும் மட்டுமே இருந்தது என்று கூறப்படுகிறது. இரண்டிலும் தையல்கள் தெளிவாக வெளிப்பட்டன. அன்னார் (ரலி) அவர்கள் பேரீத்தம் பழ மர இலைகளின் படுக்கையில் தூங்கி வந்தார்கள். ஈமானில் உறுதிப்பாடு, நீதியில் மேலோங்கி இருப்பது, அரேபியர்கள் மற்றும் இஸ்லாத்தின் முன்னேற்றம், அமைதி ஆகியவற்றை தவிர்த்து அன்னாருக்கு வேறு எந்த சிந்தனையும் இருந்ததில்லை.

(History of the Arabs by Philip K.Hitti, 10th edition, page 175, London 1989)

இன்னும் இந்த நற்குறிப்பு தொடர்கின்றது. இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் நாட்களில் எடுத்துரைக்கப்படும்.

தற்போது நான் சில மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைப்பேன். அவற்றில் முதன்மையான நற்குறிப்பு மதிப்பிற்குரிய சாஹிப்ஸாதி ஆஸிபா மஸ்வூதா சாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களின் மகனாகிய டாக்டர் மிர்ஸா முபஷ்ஷிர் அஹ்மது சாஹிப் அவர்களின் மனைவியாக இருந்தார்கள். கடந்த நாட்களில் 92 வது வயதில் அன்னார் மரணமடைந்துள்ளார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அன்னார் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மகள்வழிப் பேத்தியும், ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் சாஹிபா (ரலி) மற்றும் ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலி கான் சாஹிப் (ரலி) ஆகியோரின் மிகவும் இளைய புதல்வியாகவும் இருந்தார்கள். ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் அவர்களின் மருமகளாக இருந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்திருந்தார்கள். அன்னாரின் நினைவாக ஒரு மகனும், நான்கு மகள்களும் உள்ளனர்.

மர்ஹூமாவின் மகன் தாரிக் அக்பர் இவ்வாறு கூறுகின்றார்கள்: அம்மா எப்போதும் ஜமாஅத் மற்றும் காலத்தின் கலீஃபாவின் நன்றியுணர்வு கொண்டவராக இருந்தார்கள். ஜமாஅத்திற்கு தொண்டாற்ற வேண்டுமென்றும், தனது வஸிய்யத்தின் உரிமைகளை வழங்க வேண்டும் என்றும் எப்போதும் முயற்சி செய்து வந்தார்கள். அன்னார் தனது வாழ்க்கையிலேயே தமது ஹிஸ்ஸா ஜாயிதாத் பங்கை வழங்கி விட்டார்கள். ஒவ்வொரு வருடமும் மர்ஹூமீன்கள் சார்பாகவும் சந்தா செலுத்தி வந்தார்கள். ஏழைகளுக்கு மனம் திறந்தும், இரகசியமாகவும் உதவி செய்து வந்தார்கள். இவர்கள் உமது சகோதர, சகோதரிகளைப் போன்றவர்கள் என்றும் அவர்களை கருத்தில் கொள்ளும்படியும் வேலையாட்களை குறித்து கூறி வந்தார்கள். உறவுகளை பேணுவதற்கு முயற்சி செய்து வந்தார்கள். தம்மால் எவருக்கும் எந்த துன்பமும் ஏற்பட்டு விடக்கூடாது என்று முயற்சி செய்து வந்தார்கள். தொழுகைகளை பேணுபவராகவும், அல்லாஹ்விற்குரிய உரிமைகள் மற்றும் அடியார்களுக்குரிய உரிமைகளை வழங்கக்கூடிய பெண்மணியாகவும் இருந்தார்கள்.

அன்னாரின் மருமகள் நயீமா சாஹிபா இவ்வாறு கூறுகின்றார்கள்: அமெரிக்காவில் எங்களது வீட்டின் கட்டுமானம் முழுமையடைந்தபோது அன்னார் இவ்வாறு கூறினார்கள்: இந்த வீட்டில் பொருட்களை கொண்டு வருவதற்கு முன்பாக முதலில் இந்த வீட்டின் ஒவ்வொரு அறையிலும், ஒவ்வொரு மூலையிலும் நஃபில் தொழுகைகளை தொழுங்கள்.

தொடர்ந்து அன்னார் (மருமகள்) கூறுகின்றார்கள்: எனது தாயாரின் மரணத்திற்குப் பிறகு இவ்வாறு கூறினார்கள்: தற்போது உனக்கு தாய், தந்தை இல்லை என்று நீ கருத வேண்டாம். நான் உனது தாய் ஆவேன் என்று என்னிடம் கூறினார்கள். உண்மையில் அன்னார் எனக்கு அன்பை வழங்கினார்கள். மேலும் அந்த நேசமிகு மற்றும் துஆக்கள் செய்யக்கூடிய அந்த நபர் தனது மகள்களை விட அதிகமான அன்பை எனக்கு வழங்கினார். ஒருபோதும் கிலாஃபத்துடனான தொடர்பை முறித்து விடக்கூடாது என்று எனக்கு எப்போதும் அறிவுரை செய்து வந்தார்கள்.

அடுத்து அன்னாருடன் எனக்கும், பல்வேறு வகையில் பந்தங்கள் உள்ளன. ஏனென்றால் அன்னார் எனது தந்தைவழிப் பாட்டியின் இரண்டாவது சகோதரியாகவும் இருந்தார்கள். அதன் அடிப்படையில் பாட்டி என்று அழைக்கப்பட்டு வந்தார்கள். பின்னர் பெரியண்ணையாகவும் இருந்தார்கள். உறவில் மாமியாகவும் இருந்து வந்தார்கள். இந்த அனைத்து உறவுகளுக்குப் பிறகும் காலத்தின் கலீஃபாவின் சீடராக உள்ளேன் என்று அன்னார் கூறி வந்தார்கள். இது வெறும் பேச்சுக்கள் மட்டுமல்ல. மாறாக, உள்ளபடியே அன்னார் கிலாஃபத்துடனான இந்த தொடர்பை நன்றியுணர்வுடன் பேணி வந்தார்கள். அதிகமாக தான தர்மங்கள் செய்யக்கூடிய பெண்மணியாக இருந்தார்கள். தஹ்ரீகே ஜதீத் சந்தாவை சான்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் சார்பாக இன்னும் கூறப்போனால் காதியான் ஊழியர்களின் சார்பாகவும் செலுத்தி வந்தார்கள். ஊழியர் ஒருவர் இடம் பெயர்ந்து செல்லும்போது அவருக்கு போதுமான பொருட்களை கொடுத்து வழியனுப்பி வைப்பார்கள். பின்னர் ஏதாவது தவறு நிகழ்ந்திருந்தால் மன்னித்து விடவும் என்றும் கூறுவார்கள்.

ஷாஹிதா என்ற அன்னாரின் ஒரு மகள் இவ்வாறு கூறுகின்றார்கள்: நாங்கள் சிறியவர்களாக இருந்தபோது அம்மா அவர்கள் எங்களுக்கு அல்லாஹ்வுடன் இவ்வாறு அறிமுகத்தை ஏற்படுத்தி வைத்தார்கள். அதாவது செருப்பின் வார் வேண்டுமென்றாலும் நீங்கள் அல்லாஹ்விடத்தில் வேண்டுங்கள். துஆக்களில் அழுத்தம் கொடுங்கள் என்று கூறி வந்தார்கள். மேலும் கிலாஃபத்தின் கண்ணியத்தின் பக்கம் மிகவும் கவனமூட்டி வந்தார்கள். கிலாஃபத்தின் தேர்தலுக்கான நேரம் வந்தபோது யார் கலீஃபாவாக தேர்ந்தெடுக்கப்பட்டாலும் முழுமையான கட்டுப்படுதலுக்கான உணர்வுடன் அவருக்கு கட்டுப்பட வேண்டும் என்று கூறி வந்தார்கள். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பசுமையான கிளைகளாக நீங்கள் மாற வேண்டும். காய்ந்த கிளைகளாக மாறி விடக்கூடாது. எவருடைய தடுமாற்றத்திற்கும் காரணியாக ஆகிவிடக்கூடாது என்று துஆ செய்து வரும்படியும் என்னிடம் கூறி வந்தார்கள்.

அன்னாரின் ஒரு மகள் நுஸ்ரத் ஜஹான் இவ்வாறு கூறுகின்றார்கள்: சிறு வயது முதலே தர்பிய்யத்திற்கான அம்சத்தை எப்போதும் கருத்தில் வைத்திருந்தார்கள். திருக்குர்ஆன் ஓதிக் கொண்டிருந்தால் ஒரு வசனத்தில் நின்று விடுவார்கள். மேலும் எங்களுக்கு அதன் பொருளை புரிய வைப்பார்கள் அல்லது ஏதாவது அறிவுரை செய்வார்கள். இந்த அடிப்படையில் எப்போதும் சான்றோர்களின் நற்குறிப்பை செய்து வந்தார்கள். மிகவும் விலைமதிக்க முடியாத மற்றும் படிப்பினைக்குரிய சம்பவங்கள் அவர்களுக்கு நினைவில் இருந்தன. அதனை அன்னார் பெரும்பாலும் எங்களுக்கு கூறி வந்தார்கள்.

லாஹூர் மாவட்ட சத்ர் லஜ்னா சாஹிபா ஃபவ்ஸியா ஷமீம் அன்னார் அம்மத்துல் ஹஃபீஸ் பேகம் சாஹிபா (ரலி) அவர்களின் மகளாகவும் உள்ளார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: மர்ஹூமா ஓர் அசாதாரண பெண்மணியாக இருந்தார்கள். எப்போதெல்லாம் அன்னாரிடம் சந்தாவிற்கு கூறப்பட்டதோ அன்னார் திறந்த மனதுடன் சந்தா செலுத்தி வந்தார்கள். சில முறை வாயளவிலும், சில முறை சீட்டில் எழுதியும் சந்தாவிற்கான வாக்குறுதியை செய்திருந்தார்கள். பெரும் தொகையை சந்தாவிற்கு கொடுத்து வந்தார்கள். அத்துடன் இதைப் பற்றி எங்கும் குறிப்பிட வேண்டாம் என்றும் கூறி வந்தார்கள். மிகவும் எளிமையான பெண்மணியாக இருந்தார்கள். தனது தனிப்பட்ட விவகாரங்களில் மிகவும் எளிமையானவராக

இருந்தார்கள். எந்த அளவுக்கென்றால் சில மக்கள் அன்னாரை கருமி என்று கருதி வந்தார்கள். சுயம் எளியவராக இருந்து வந்தார்கள். ஆனால் தான தர்மங்கள் செய்வதில் மிகவும் மனம் திறந்து செலவழித்து வந்தார்கள்.

ஒரு முறை நான் எனது பகுதியில் பள்ளிவாசலுக்காக விண்ணப்பம் வைத்தேன். அன்னாரிடம் அதைப் பற்றி கூறினேன். அப்போது ஒரு பெரும் தொகையை அதாவது சுமார் ஒரு கோடி ரூபாயை எனக்கு சந்தாவிற்காக அனுப்பி வைத்தார்கள்.

அடுத்து அன்னாரின் மகள்வழிப் பேத்தி ராஸியா இவ்வாறு கூறுகின்றார்கள்: ஏராளமான நல்ல விஷயங்களையும், வழிகாட்டுதல்களையும் குழந்தைப் பருவம் முதலே எங்களுக்கு செய்து வந்தார்கள். குழந்தைப் பருவம் முதலே நன்மை செய்வதற்கு நற்பேறு கிடைக்க துஆ செய்யும்படி அறிவுறுத்தி வந்தார்கள். நல்ல கணவர் கிடைப்பதற்கு துஆ செய்யுமாறும் அறிவுறுத்தி வந்தார்கள். அல்லாஹ்விடம் எந்த வெட்கமும் கூடாது. அவனிடத்தில் மனம் திறந்து வேண்ட வேண்டும் என்று எங்களுக்கு சிறு வயதில் கூறி வந்தார்கள். மார்க்க புத்தகங்களை தொடர்ந்து படித்து வந்தார்கள். பெரும்பாலும் பயணங்களில் வண்டியில் வைத்து துஆக்களை கொண்ட கவிதை வரிகளையும் படித்து வந்தார்கள்.

அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் பிள்ளைகளுக்கும் அடுத்த தலைமுறைக்கும் அன்னாரின் அடிச்சுவட்டில் செல்வதற்கு நற்பேறு வழங்குவானாக.

அடுத்து இரண்டாவது நற்குறிப்பு கஜாகிஸ்தானின் முன்னாள் அமீர் ஜமாஅத் ரோலான் ஸாஸின் பாயிஃப் சாஹிப் அவர்களின் மனைவியாகிய மதிப்பிற்குரிய கலாரா ஆப்பா சாஹிபா அவர்களுடையதாகும். அன்னார் கடந்த மாதம் மரணடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

கஜாகிஸ்தானின் முபல்லிக் அதாவுர் ரப் சீமா சாஹிப் அவர்கள் இவ்வாறு எழுதுகின்றார்கள்: 1994–1995 ல் மர்ஹூமாவிற்கு பைஅத் செய்யும் நற்பேறு கிடைத்தது. கஜாகிஸ்தானின் ஒரு பிரபலமான குடும்பத்தோடு அன்னார் தொடர்புடையவராக இருந்தார்கள். அன்னாரின் கணவர் மதிப்பிற்குரிய ரோலான் ஸாஸின் பாயிஃப் சாஹிப் கஜாகிஸ்தான் ஜமாஅத்தின் முதல் அமீராகவும், ஜனாதிபதியின் ஆலோசகராகவும் இருந்துள்ளார்கள். கஸாஹ் மொழியில் மிகவும் பிரபலமான இலக்கியவாதியாகவும் உள்ளார்கள். கலாரா சாஹிபா அவர்களும் மிகச் சிறந்த மொழிபெயர்ப்பாளராகவும், நூலாசிரியையாகவும் இருந்தார்கள். கலாரா சாஹிபா மற்றும் அன்னாரின் கணவர் மதிப்பிற்குரிய ரோலான் சாஹிப் ஆகியோரின் துணை கொண்டு கஜாகிஸ்தானில் ஜமாஅத் அமைப்பு நிலைநாட்டப்பட்டது.

மதிப்பிற்குரிய கலாரா சாஹிபா கஸாஹ் மொழியில் திருக்குர்ஆனை மொழியாக்கமும் செய்துள்ளார். அதனை வெளியிட முடியவில்லையென்றாலும் அதன் மூலம் அன்னாருக்கு ஜமாஅத்தின் மீதிருந்த அதிக அன்பும், அன்னார் அஹ்மதிய்யத்தை கஜாகிஸ்தானில் விரைவாக பரவுவதை பார்க்க விரும்பினார்கள் என்பதும் வெளிப்பட்டுள்ளது. எனவே அன்னார் அதற்காக இயன்ற அளவிற்கு முயற்சியும் செய்திருந்தார்கள். உள்ளூர் முல்லாக்கள் எதிர்ப்பில் இந்த குடும்பத்தை பற்றி குறிப்பிடும்போது இவர்கள் அஹ்மதிகள். கஜாகிஸ்தானில் அஹ்மதிய்யத்தை இவர்களே கொண்டு வந்துள்ளனர் என்பதையும் நிச்சயம் வெளிப்படுத்தி வருகின்றார்கள்.

மர்ஹூமா கலாரா சாஹிபாவின் மகள் மர்ஹுப் அஸாஸீன் ஃபாயிவா எழுதுகின்றார்கள்: அன்னார் மிகவும் சிறந்த மொழிபெயர்ப்பாளராக இருந்தார்கள். பிரபலமானவராகவும், உறுதித்தன்மை கொண்டவராகவும் இருந்தார்கள். மிகவும் தெளிவான, ஒளிமயமான நற்பண்புகளை கொண்டவராகவும் இருந்தார்கள். 1995 ஆம் ஆண்டு லண்டனில் நிறுவப்பட்ட கஜாகிஸ்தானின் தலைமையக நிறுவனத்தின் நிறுவனர்களில் ஒருவராக இருந்தார்கள். லண்டனிலேயே அன்னார் கஜாகிஸ்தான் என்ற நூலை எழுதினார்கள். மேலும் அந்த நேரத்தில் தான் அன்னார் ஜமாஅத்தைப் பற்றிய அறிமுகத்தையும் பெற்றார்கள். மேலும் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்களின் கரங்களில் பைஅத் செய்யும் நற்பேறையும் பெற்றார்கள். அன்னார் தமது பிள்ளைகளின் தாயாக மட்டும் இருக்கவில்லை. மாறாக, அன்னாரிடம் உதவிக்காகவோ அல்லது ஆலோசனைக்காகவோ வருகை தந்த அனைவருக்கும் தாய் என்ற அந்தஸ்தை பெற்றிருந்தார்கள்.

நூரம் தைபக் சாஹிப் கூறுகின்றார்கள்: ஜமாஅத்தின் அனைத்து அஹ்மதி இளைஞர்களுக்கும் பொதுவாக கஜாகிஸ்தானின் அஹ்மதிய்யா ஜமாஅத் முழுவதற்கும் அன்னார் தாய் என்ற அந்தஸ்தில் இருந்தார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: நான் கலாரா சாஹிபா அவர்களின் பத்து வருட ஒரு பெரும் காலகட்டத்தை பார்த்தேன். அதன் முதல் மூன்று வருடங்களில் மிகவும் துடிப்புடனும், உணர்வுடனும் செயலாற்றினார்கள். சில நேரங்களில் ஒரு மலையைப் போன்று ஜமாஅத்தின் தற்காப்பிலும், ஜமாஅத்தின் தொண்டுகளிலும் மும்முரமாக அன்னார் செயல்பட்டு வந்தார்கள். நோய் மற்றும் ஏனைய விவகாரங்கள், புத்தகங்களின் தயாரிப்புகள் போன்ற பணிகளின் காரணமாக பிற்காலத்தில் அன்னார் மும்முரமாகி விட்டார்கள். ஆனால் ஜமாஅத்திற்கு அதிக அதிகமாக பணி செய்ய வேண்டுமென்றும், கிலாஃபத் மற்றும் ஜமாஅத்துடன் எப்போதும் தூய உள்ளம் படைத்தவராக இருக்க வேண்டும் என்றும் அன்னார் எப்போதும் முயற்சி செய்து வந்தார்கள்.

அடுத்து அன்னார் கூறுகின்றார்கள்: ரோலான் சாஹிப் மற்றும் கலாரா சாஹிபா கஜாகிஸ்தானில் ஒரு நீண்ட காலமாக நாட்டுப்பற்று மற்றும் தேசம் மற்றும் சமுதாயத்தின் உயர்ந்த முன்னேற்றத்தின் அடையாளமாக கருதப்படுகின்றார்கள். ரோலான் சாஹிப் அவர்களின் வெற்றிகளின் பெரும் பகுதியில் மர்ஹூமா கலாரா சாஹிபா முக்கிய பங்கு ஆற்றியுள்ளார்கள். அஹ்மதிய்யா ஜமாஅத் கஜாகிஸ்தானிற்கு மர்ஹூமா ஒரு செயல் மிக்க சதர் லஜ்னாவாக மட்டும் இருக்கவில்லை. மாறாக, அஹ்மதிய்யா ஜமாஅத் கஜாகிஸ்தானின் முதல் அமீரின் ஆசிரியையாகவும் இருந்தார்கள்.

எனக்கு நினைவு உள்ளது. 1996 முதல் 1999 வரை அல்லது அதன் பிறகும் கூட அன்னார் மிகவும் சிறந்த வழிமுறையில் ஜமாஅத்தின் மிஷன் ஹவுஸில் லஜ்னாக்களின் வாராந்திர வகுப்பில் லஜ்னாக்களின் வருகையை உறுதிப்படுத்தினார்கள். அந்த நிகழ்ச்சிகளில் லஜ்னாக்கள் முரப்பி சாஹிபிடம் பல்வேறு கேள்விகளை கேட்பார்கள். பின்னர் அவர்களுக்கு அந்த கேள்விகளுக்கு பதிலும் வழங்கப்படும். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் புத்தகங்களை மொழியாக்கம் செய்வதில் கலாரா சாஹிபாவை விட சிறந்த மொழிபெயர்ப்பாளர் இருக்க முடியாது. கலாரா சாஹிபா அனைத்து மூத்த அஹ்மதிகளிலும் மிகச் சிறந்த அஹ்மதி பெண்மணியாக இருந்தார்கள். அன்னார் ஜமாஅத்தின் அஹ்மதி இளைஞர்களின் ஆன்மீக உறுதிப்பாட்டிற்கு காரணியாகவும் இருந்தார்கள். அன்னாரிடம் ஜமாஅத்தின் ஆளுமை அதாவது உண்மை இஸ்லாத்தின் அசல் ஆன்மா நிலைபெற்றிருந்தது. கடினமான நிலைமைகளிலும் அன்னார் ஒருபோதும் தைரியம் இழந்து விடவில்லை. மாறாக, எப்போதும் தன்னையும், மற்றவர்களையும் வெற்றிகளின் பக்கம் கொண்டு செல்லக்கூடியவர்களாக இருந்தார்கள்.

அல்லாஹ் மர்ஹூமாவுடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. மேலும் கஜாகிஸ்தானில் ஜமாஅத் தொடர்பாக அன்னார் மேற்கொண்ட முயற்சிகளையும் முழுமை செய்வானாக. மேலும் அன்னாரின் துஆக்களையும் அல்லாஹ் பூர்த்தி செய்வானாக.

அடுத்த நற்குறிப்பு கமாண்டர் அப்துர் ரஷீது சாஹிப் அவர்களுடையதாகும். கடந்த மாதங்களில் அன்னார் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُونَ

அல்லாஹ்வின் அருளால் மூஸியாக இருந்தார்கள். அன்னாரின் மகன் ஃபாரூக் சாஹிப் கூறுகின்றார்கள்: அன்னாரின் தந்தையார் பெயர் பாபு ஷேக் அப்துர் ரஷீத் ஆகும். அன்னார் மஜ்லிஸ் கார்பர்தாஸின் செயலராக இருந்தார்கள். அன்னாரின் பெரியப்பா கான் சாஹிப் ஃபர்ஸந்த் அலி கான் சாஹிப் ஆவார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஜமாஅத்தின் வரலாற்றில் லாஹூர் ஜமாஅத்தின் முதல் அமீராக அன்னாரை நியமித்தார்கள். அன்னாரின் தந்தை தமது இளமைப் பருவத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கரங்களில் நேரடியாக பைஅத் செய்திருந்தார்கள்.

தமது தந்தையைக் குறித்து அன்னார் கூறுகின்றார்கள்: ரஷீத் சாஹிப் தனது பெற்றோர்களுக்கு ஒரே பிள்ளையாக இருந்தார்கள். ரஷீத் சாஹிப் அவர்களின் பிள்ளைகளுக்கு முதலில் திருமணம் நடந்தது. பின்னர் அன்னார் அஹ்மதிய்யத்தை ஒப்புக் கொண்டதன் காரணமாக தனது மனைவி மற்றும் தனது இரண்டு மகன்களை கைவிட நேரிட்டது. பின்னர் இரண்டாவது திருமணம் நடந்தது. அதன் மூலம் ரஷீத் சாஹிப் அவர்கள் பிறந்தார்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: தனது பெற்றோர்களை மிகவும் பின்பற்றக் கூடியவராக இருந்தார்கள். எப்போதும் தொண்டாற்றுவதற்கும், அவர்களின் கூற்றை கீழ்ப்படிந்து செவிமடுத்தும் வந்தார்கள். (இந்தியா, பாகிஸ்தான்) பிரிவினை வரை தந்தையார் காதியானிலேயே கல்வி பயின்றார்கள். பிரிவினை சந்தர்ப்பத்தின்போது அன்னாரும் ஏனைய பயணக் குழுக்களுடன் லாஹூரை வந்தடைந்தார்கள். பின்னர் ஆரம்ப கால சில குடும்பங்களுடன் அன்னாரின் பெற்றோர்கள் ரப்வா சென்று குடிபெயர்ந்து

விட்டார்கள்.

1954 ல் அன்னார் ஏர்போர்ஸில் பட்டம் பெற்றார்கள். பல்வேறு விமானத் தளங்களில் பணியமர்த்தப்பட்டார்கள். அவர்கள் இருந்த இடங்களிலெல்லாம் அஹ்மதிய்யத்தை மிகவும் வெளிப்படுத்தி வந்தார்கள். லிபியாவிலும் சில காலம் பாகிஸ்தான் அரசாங்கம் சார்பாக அன்னார் டெப்டேஷனில் அனுப்பப்பட்டிருந்தார்கள். அன்னாரின் கோப்புகளில் இவர் காதியானி. இவர் செல்ல முடியாது என்று எழுதப்பட்டிருந்தபோதிலும் அன்னாரின் உயர் அதிகாரி உம்மைப் போன்ற அதிகாரி எனக்கு வேறு எங்கும் தென்படவில்லை என்று கூறி அன்னாரை அனுப்பி வைத்து விட்டார்.

அன்னார் கூறுகின்றார்கள்: எனது தந்தையார் இவ்வாறு கூறி வந்தார்கள். ஒரு முறை பாகிஸ்தானின் தூதரை லிபியாவில் சந்தித்தார்கள். அன்னார் தூதரின் அலுவலகத்தில் நுழைந்தபோது ஒரு பக்கம் அரபி மொழியில் ஜமாஅத்திற்கு எதிரான புத்தகங்களும், பிரசுரங்களும் வைக்கப்பட்டிருந்தன. எனவே அன்னார் (ரஷீது சாஹிப்) மிகவும் துணிவுடன், இவை என்ன? ஏன் வைத்துள்ளீர்கள்? என்று தூதரிடம் கேட்டார்கள். அதற்கு அவர் நீங்கள் கவலை கொள்ள வேண்டாம். இவை அனைத்தும் வீணானவையாகும் என்று அந்த தூதர் பதிலளித்தார். இவை ஸியாவுல் ஹக் அரசாங்கத்தின் சார்பாக அச்சிடப்பட்டு எங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. இதனை உங்களது நாடுகளில் வழங்குங்கள் என்று கூறப்பட்டுள்ளது. அனைத்து அரபு தூதரகங்களுக்கும் இவை அனுப்பப்பட்டுள்ளன.

அடுத்து அன்னார் கூறுகின்றார்கள்: 1982 ல் ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் ஸ்பெயின் வந்தபோது அன்னாரின் ஓர் அறிக்கை கிடைத்திருந்தது. அப்போது ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹி) அவர்கள் தமது கரங்களால் கடிதம் எழுதி அன்னாரை லிபியாவின் அமீர் ஜமாஅத்தாக நியமித்தார்கள். மேலும் அன்னார் லிபியாவின் முதல் அமீர் ஜமாஅத்தாக இருந்தார்கள்.

தொழுகைகளை பேணுவதில் மிகச் சிறந்தவராக இருந்தார்கள். அது ஒரு நம்பிக்கையாளரின் கடமையும் ஆகும். திருக்குர்ஆன் ஓதுவதிலும், சந்தாக்களை செலுத்துவதிலும் மிகவும் முறையானவராக இருந்தார்கள். மரணத்திற்கு முன்பாகவே தமது ஹிஸ்ஸா ஆமத் சந்தாவை செலுத்தி முடித்திருந்தார்கள். வக்ஃபே ஜதீத் மற்றும் தஹ்ரீகே ஜதீத் சந்தாக்களை தமது சார்பாகவும், தமது சான்றோர்கள் சார்பாகவும் செலுத்தி வந்தார்கள்.

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் ஒரு சம்பவத்தை அன்னார் தமது ஒரு மகனிடம் கூறினார்கள்:மகன் கூறுகின்றார்: ரப்வாவின் ஆரம்ப நாட்களில் ஒரு சந்தர்ப்பத்தில் இரண்டாவது கலீஃபா அவர்கள் அன்னாரை அழைத்தார்கள். அது வெப்பத்தின் நாட்களாக இருந்தன.

மகன் கூறுகின்றார்: எனது தந்தை அறையில் நுழைந்தபோது ஹுஸூர் அவர்கள் படுக்கையில் படுத்திருந்தார்கள். ஹுஸூர் அவர்கள் எழுந்தபோது ஹுஸூர் அவர்களின் உடலில் படுக்கையின் அடையாளங்கள் இருந்தன. இந்த விஷயங்களின் காரணமாக அன்னார் கூறுகின்றார்கள்: எங்களது பிள்ளைகளின் உள்ளங்களிலும் கிலாஃபத்தின் மீதான அன்பும், கட்டுப்படுதலின் உயரிய தொடர்பும் உருவாக வேண்டும். மேலும் உருவாகியது. மேலும் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியது.

1984 ஆம் ஆண்டு ஏர்ஃபோர்ஸிலிருந்து சக்வாடன் தலைவர் என்ற பொறுப்பிலிருந்து ஓய்வு பெற்றார்கள். பின்னர் நிரந்தரமாக ரப்வாவில் தங்கினார்கள். சதர் உமூமியாகவும், கஸா அலுவலகத்திலும் சிறிது காலம் பணியாற்றினார்கள். ஏழைகளை பராமரிக்கும் மனிதராக இருந்தார்கள். ஒவ்வொருவரின் தேவையையும் கருத்தில் கொண்டு வந்தார்கள். அன்னார் மரணத்திற்கு முன்பு ஏழைகளை கருத்தில் கொள்ளுங்கள் என்றே வஸிய்யத் செய்து சென்றுள்ளார்கள்.

அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. பிள்ளைகளுக்கும் அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்வதற்கான நற்பேறை வழங்குவானாக.

அடுத்த நற்குறிப்பு அமெரிக்காவின் அஹ்மது நயீம் சாஹிப் அவர்களின் மனைவி மதிப்பிற்குரிய சுபைதா பேகம் சாஹிபா அவர்களுடையதாகும். கடந்த மாதங்களில் அன்னாரின் மரணமும் நிகழ்ந்துள்ளது. إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

அன்னார் ஹஸ்ரத் டாக்டர் ஹஷ்மத்துல்லாஹ் சாஹிப் (ரலி) அவர்களின் இளைய மருமகளாக இருந்தார்கள். மர்ஹூமா கிலாஃபத்தின் மீது பற்று கொண்டவராகவும், நல்ல மற்றும் தூய பெண்மணியாகவும் இருந்தார்கள். அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்திருந்தார்கள். மூன்று மகன்களையும், இரண்டு மகள்களையும் தமது நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள்.

அன்னாரின் ஒரு மகன் முன்யிம் நயீம் சாஹிப் அவர்கள் USA வின் Humanity First அமைப்பின் சேர்மனாக உள்ளார். மேலும் டாக்டர் அப்துல் மன்னான் சித்தீகி சாஹிப் அவர்களின் மாமியாராவும் மர்ஹூமா இருந்தார்கள்.

மர்ஹூமாவின் மகள் அதாவது டாக்டர் மன்னான் சித்தீகி சாஹிப் அவர்களின் மருமகள் அமதுஷ் ஷாஃபி சாஹிபா இவ்வாறு எழுதுகின்றார்கள்: எல்லோருடனும் அன்பு மற்றும் நேசத்துடன் நடந்து கொள்வது அன்னாரின் நடைமுறையாக இருந்தது. அவர்களுக்காக துஆக்களும் செய்து வந்தார்கள். சிறந்த ஆலோசனைகளையும் வழங்கி வந்தார்கள். ஏழைகளுக்கு உதவி செய்து வந்தார்கள். நெருங்கிய மற்றும் தொலைவிலுள்ள அனைத்து உறவினர்களுடனும் நேசம் கொள்வது அன்னாரின் தனித்தன்மையாக இருந்தது. இளமைப் பருவம் முதலே தஹஜ்ஜுத் தொழக் கூடியவராக இருந்தார்கள். அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தவாறு தமது வாழ்க்கையை கழித்தார்கள். அன்னார் ஜுமுஆ நாளை சிறப்பான இறைவணக்கங்களில் கழித்து வந்ததை குழந்தைப் பருவம் முதலே நாங்கள் பார்த்துள்ளோம். தமது சந்தாக்களை குறித்த நேரத்தில் செலுத்த வேண்டும் என்பதில் கவலை கொண்டிருந்தார்கள். அல்லாஹ் அன்னாருடன் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. பிள்ளைகளுக்கும் நன்மைகள் செய்யும் நற்பேறை வழங்குவானாக.

அடுத்த நற்குறிப்பு ஹஃபீஸ் அஹ்மது கமன் சாஹிப் அவர்களுடையதாகும். அன்னார் கடந்த நாட்களில் மரணமடைந்து விட்டார்கள். إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ

திருக்குர்ஆனின் மொழியாக்கம் மற்றும் தஃப்ஸீரை படிப்பதற்கு அன்னாருக்கு சிறப்பான ஆர்வம் இருந்தது. அதேபோன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அனைத்து புத்தகங்களையும் வாசித்திருந்தார்கள். ரப்வாவில் மார்க்க தொண்டாற்றுவதற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. நேரத்தை மிகவும் பேணி வந்தார்கள். விருந்து உபசரிப்பு செய்பவராகவும், பிள்ளைகள் மீது பரிவு காட்டுபவராகவும், மிகவும் எளிய இயல்பு படைத்தவராகவும், கடினமாக உழைக்கும் நபராகவும் அன்னார் இருந்தார்கள். நாவில் எப்போதும் இறைவனை நினைவு கூர்ந்து வந்தார்கள். படைப்பின அனுதாபத்தில் மிகவும் முன்னேறி இருந்தார்கள். தம்மை துன்பத்தில் ஆழ்த்திக் கொண்டு மற்றவர்களுக்கு நிம்மதியை வழங்க முயற்சி செய்து வந்தார்கள். மர்ஹூம் அல்லாஹ்வின் அருளால் வஸிய்யத் செய்திருந்தார்கள். தமக்குப் பிறகு மனைவி மட்டுமின்றி மூன்று மகன்கள் மற்றும் மூன்று மகள்களை தமது நினைவாக விட்டுச் சென்றுள்ளார்கள். அன்னாரின் மருமகன் காஷிஃப் ஹமீது பாஜ்வா அவர்களும் இங்கு நமது PS அலுவலகத்தில் தற்போது முரப்பியாக பணியாற்றி வருகின்றார்கள்.

அன்னாரின் மகள் அமத்துல் குத்தூஸ் இவ்வாறு கூறுகின்றார்கள்: மர்ஹூமாவிடத்தில் பணிவும், தாழ்மை குணமும் நிறைந்து காணப்பட்டது. உடையும், வீடும், உணவும் சாதாரணமானதாக இருந்தது. பெருமை பேசுவதிலிருந்து எப்போதும் விலகி இருப்பவராகவும் இருந்தார்கள். எப்போதும் ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. வசதி வாய்ப்பு இருந்தபோதிலும் தமக்காக மிகக் குறைவாகவே செலவு செய்து வந்தார்கள். ஏழைகளுக்கு அதிகமாக செலவு செய்து வந்தார்கள்.

அல்லாஹ் அன்னாருடனும் பாவமன்னிப்பு மற்றும் கருணையுடன் நடந்து கொள்வானாக. அன்னாரின் பிள்ளைகளுக்கும் அன்னாரின் நன்மைகளை தொடரச் செய்யும் நற்பேறை வழங்குவானாக.

(மவ்லவி அ. அப்துர் ரஹ்மான் தாஹிர்)

## *126 வது காதியான் ஆண்டு மாநாடு*

ஸய்யிதுனா அமீருல் மூமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஸ் (அய்ய...) அவர்கள் 126 வது காதியான் ஆண்டு மாநாட்டை நடத்த டிசம்பர் 24, 25, 26 (வெள்ளி, சனி, ஞாயிறு) 2021 ஆகிய தேதிகளுக்கு ஒப்புதல் நல்கியுள்ளார்கள். இந்த இறை மாநாட்டிலிருந்து பயன் பெறும் நற்பேறை அல்லாஹ் நம் அனைவருக்கும் வழங்குவானாக. ஆண்டு மாநாடு எல்லா வகையிலும் வெற்றிகரமாகவும், அருளுக்குரியதாகவும் நடைபெறவும், நல்லுள்ளங்களின் நேர்வழிக்கு காரணியாக அமையவும் தொடர்ந்து துஆக்கள் செய்து வாருங்கள்.

(நாஸிர் இஸ்லாஹ்–வ–இர்ஷாத் மர்கஸிய்யா, காதியான்)

*முதல் பக்கத்தின் தொடர்ச்சி...*
*ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் கூற்று...*

திருக்குர்ஆனை செவியுற்றார்கள் என்றும் தெரிய வருகின்றது. அவர்கள் திரும்பும்போது அன்னார் (ஸல்) அவர்கள் உண்மையாளர்கள் என்று அவர்களின் உள்ளம் சாட்சி பகர்ந்தது. மேலும் அவர்கள் தமது சமுதாயத்திற்கு தப்லீக் செய்ய துவங்கி இருந்தார்கள். அந்த ஜின்கள் மனிதர்களாக இருந்தார்கள் என்பதற்கான சான்றுகள் கீழே தரப்பட்டுள்ளன.

முதலாவதாக, அவர்கள் மறைவாக சந்தித்தனர். அவர்கள் ஜின்களாக இருந்தார்கள் என்றால் பின்னர் மறைவாகவும், இரவிலும் சந்திப்பதற்கு என்ன அவசியம் இருந்தது? பகிரங்கமாக சந்தித்திருந்தால் அவர்களுக்கு என்ன பாதிப்பை ஏற்படுத்தியிருக்க முடியும்? ஜின்களின் சிறப்புகளாக கூறப்படுகின்ற விஷயங்களை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால், அவர்களை யார் பார்த்திருக்க முடியும்?

இரண்டாவதாக, لِّتُؤْمِنُوا بِاللَّهِ وَرَسُولِهِ وَتُعَزِّرُوهُ وَتُوَقِّرُوهُ என்று திருக்குர்ஆனில் அல்லாஹ் கூறுகின்றான்.

பொருள்: நம்பிக்கையாளர்களே! நீங்கள் அவருக்கு உதவி மற்றும் ஒத்தாசை செய்வதற்காகவும், அவரின் கண்ணியத்தை உலகத்தில் நிலைநாட்டுவதற்காகவும் நாம் இந்த தூதரை அனுப்பியுள்ளோம்.

ஜின்கள் நம்பிக்கை கொண்டிருந்தால் அவர்கள் எந்த வடிவில் தூதர் (ஸல்) அவர்களுக்கு உதவி செய்து வந்தார்கள்? எந்த மக்களின் தலையில் ஜின்கள் ஏறி விடுகின்றார்களோ அவர்களுக்கு வகை வகையான பழங்களை கொண்டு வருகின்றார்கள் என்று அந்த மக்கள் கூறுகின்றனர். முஹம்மது (ஸல்) அவர்கள் மீது அநீதி மேல் அநீதி இழைக்கப்பட்டது. ஆனால் காஃபிர் ஜின்கள் கூட ஹஸ்ரத் சுலைமான் (அலை) அவர்களுக்காக கோட்டைகளை தயார் செய்தார்கள். இழிவிலும் இழிவான எல்லா பணிகளையும் அன்னாருக்காக செய்தார்கள். ஆனால் இவர்கள் என்ன நம்பிக்கையாளர்களாக இருந்தார்கள்? இந்த நம்பிக்கை கொண்ட ஜின்கள் அபூஜஹில் போன்ற எந்த நபருக்கும் எந்த தண்டனையும் வழங்கவில்லை.

ஆக மக்களுக்கு பருவ நிலைக்கு மாற்றமாக பழங்களை கொண்டு வந்து கொடுக்கக்கூடிய இந்த ஜின்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்ட பிறகும் அவர்களுக்கு இந்த நற்பேறு கிடைக்கவில்லை. அதாவது அகழ் போர் சந்தர்ப்பத்தில் அன்னார் (ஸல்) அவர்களுக்கும், ஏனைய முஸ்லிம்களுக்கும் பசிக்கு மேல் பசி ஏற்பட்டு வந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், அன்னாரின் சஹாபிகளும் வயிறுகளில் கற்களைக் கட்டிக் கொண்டு இருந்தனர். இந்த மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும், அன்னாரின் சஹாபிகளுக்கும் பார்லி ரொட்டிகளையாவது கொண்டு வந்திருக்கலாமே! இது ஒன்றும் ஈமானின் அடையாளம் அல்ல. மாறாக, மிக மோசமான தீமையின் அடையாளம் ஆகும். ஆனால் அவர்கள் நம்பிக்கை கொண்ட தூய மக்களாக இருந்தனர் என்று திருக்குர்ஆன் கூறுகின்றது.

எனவே சூரா ஜின்னில் குறிப்பிடப்பட்டுள்ள அந்த ஜின்களுக்கு ஒருவரின் தலை மீது ஏறி விடுவதற்கும், மனிதர்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கும் அல்லது அவர்களை துன்பப்படுத்துவதற்கும் எந்த ஆற்றலும் இருந்திருக்கவில்லை. மேலும் அவர்களுக்கு எந்த ஒன்றையும் ஒருவருக்கு கொண்டு வந்து கொடுப்பதற்கு சத்தியும் இருந்திக்கவில்லை. அதுபோன்ற ஜின்கள் மக்களின் மூளைகளில் மட்டுமே உள்ளதே தவிர திருக்குர்ஆன் அதுபோன்ற ஜின்களை ஒப்புக் கொள்ளவில்லை. திருக்குர்ஆன் முன் வைக்கின்ற ஜின்கள் நான் எடுத்துரைத்த வகையைச் சார்ந்தவர்கள் ஆவர். அந்த வகையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொண்ட அந்த ஜின்கள் யூதர்களாக இருந்தனர். அவர்கள் இறை வேதத்தை செவியுற்றனர். மேலும் தமது வீடுகளுக்கு திரும்பினர். இறுதியில் ஈமான் கொள்வதற்கு முடிவெடுத்தனர். மேலும் தமது சமுதாயத்திற்கு தூதுச் செய்தியை எட்ட வைத்தனர். அரபு நாட்டிலிருந்து ஆயிரக்கணக்கான மைல் தொலைவில் வசிப்பவர்களாக இருந்தனர். பிற்காலத்தில் அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் குறித்து செய்தி ஏதும் கிடைத்ததா? இல்லையா? என்று கூற முடியாது. இதன் காரணமாக அவர்கள் இஸ்லாமிய போர்களில் செயல் ரீதியாக எந்தப் பங்கும் வகிக்கவில்லை.

அந்த ஜின்கள் மனிதர்களாக இருந்தனர் என்பதற்கான மூன்றாவது ஆதாரம் என்னவென்றால், அல்லாஹ் தூதர்களைக் குறித்து مِّنْ أَنفُسِهِمْ என்று கூறுகின்றான்: அதாவது தூதர்கள் எவர்களிடம் வருகின்றார்களோ அவர்களின் சமுதாயத்தைச் சார்ந்தவராகவே இருக்கின்றனர்.
மேலும் மற்றோர் இடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:

وَيَوْمَ نَبْعَثُ فِي كُلِّ أُمَّةٍ شَهِيدًا عَلَيْهِم مِّنْ أَنفُسِهِمْ وَجِئْنَا بِكَ شَهِيدًا عَلَىٰ هَٰؤُلَاءِ

பொருள்: கியாமத் நாளன்று ஒவ்வொரு சமுதாயத்திற்கும் அந்த சமுதாயத்தைச் சார்ந்த ஒருவர் சாட்சியாக கொண்டு வரப்படுவார். முஹம்மது (ஸல்) அவர்கள் முஹம்மதிய சமுதாயம் மற்றும் அந்த காலத்து மக்கள் மீது சாட்சியாக கொண்டு வரப்படுவார்.

ஒருவேளை ஜின்களும் ஒரு சமுதாயமாக உள்ளனர். மேலும் நம்பிக்கை கொள்கின்றனர் என்றால் அவர்களுக்கு யார் சாட்சியம் வழங்குவார்? மூஸா ஒன்றும் ஜின்னாக இருக்கவில்லை. யார் அன்னார் மீது ஈமான் கொண்டார்கள் என்று அந்த ஜின்களைப் பற்றி அன்னாரிடம் கேட்க முடியாது. அதேபோன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மனிதராக இருந்தார்கள். எனவே مِّنْ أَنفُسِهِمْ என்ற அடிப்படையில் அவற்றுடன் தொடர்பு இருக்கவில்லை. எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜின்களுக்கு சாட்சியமாக இருக்க முடியாது.

مِّنْ أَنفُسِهِمْ என்பதன் பொருள் முந்தைய நபிமார்களைப் பொறுத்தவரை அவர்களின் சமுதாயங்கள் ஆவர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பொறுத்தவரை அன்னாரின் காலத்திற்குப் பிறகு அனைத்து மனிதர்களும் அடங்குவர். எனவே மனிதர்களைப் போன்று ஒரு வெளிப்படையான படைப்பாக ஜின்கள் இருந்திருந்தால் அவை வெறும் படைப்பாகவே இருந்து விடும். நற்கூலிக்கும் தகுதி படைத்தவையாக இருக்காது. தண்டனைக்கும் தகுதி படைத்தவையாக இருக்காது.


(தஃப்ஸீரே கபீர் தொகுதி 14பக்கம் 110 – 2010 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

*மல்ஃபூஸாத் (முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

சந்தித்தார். அவரிடம் மக்காவின் நிலையை அன்னார் கேட்டார்கள். புதிய செய்தியை கூறும் என்று கூறினார்கள். மனிதன் பயணத்திலிருந்து திரும்பும்போது தமது தேசத்தை சேர்ந்த ஒருவர் அவரைச் சந்தித்தால் அவரிடம் தமது தேசத்தின் நிலையை கேட்பது என்பது பொதுவான நடைமுறையாகும். புதிய செய்தி என்னவென்றால், உமது நண்பர் (முஹம்மது (ஸல்)) நபித்துவ வாதம் செய்துள்ளார் என்று அந்த நபர் கூறினார். அதைக்கேட்ட உடனேயே ஒருவேளை அவர் இந்த வாதத்தை செய்திருந்தால் நிச்சயமாக அவர் உண்மையாளர் ஆவார் என்று அன்னார் (ரலி) கூறினார்கள். இதிலிருந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) மீது எந்த அளவிற்கு அன்னாருக்கு நல்லெண்ணம் இருந்தது என்பது தெரிய வருகின்றது. அற்புதங்கள் அவசியம் என கருதவில்லை. உண்மை என்னவென்றால், நிலைமையை அறியாதவர் தான் அற்புதத்தை வேண்டுகின்றார். அந்நிய தன்மை இருக்கும்போது திருப்தி பெறுவதற்காக ஒருவர் அற்புதத்தை வேண்டுவார். ஆனால் எவருக்கு மறுப்பே இல்லையோ அவருக்கு அற்புதத்திற்கு என்ன தேவை உள்ளது?

சுருக்கமாக, ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள் வழிப்பாதையிலேயே இதைக்கேட்டு விட்டு ஈமான் கொண்டு விட்டார்கள். மேலும் மக்காவை வந்தடைந்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமூகத்தில் ஆஜராகி தாங்கள் நபித்துவ வாதம் செய்துள்ளீர்களா? என்று கேட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஆம்! சரிதான் என்று கூறினார்கள். அப்போது ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்கள், தாங்கள் சாட்சியாக இருங்கள். தங்களை உண்மைப்படுத்தக் கூடியவர்களில் நான் முதன்மையானவனாக உள்ளேன் என்று கூறினார்கள். ஆனால் இது வெறும் பேச்சாக இருக்கவில்லை. மாறாக, அதற்கேற்ப தமது செயலுடன் செயல்படுத்திக் காட்டினார்கள். இறுதி மூச்சு வரை அதை நிறைவேற்றினார்கள். மேலும் மரணத்திற்குப் பிறகும் விட்டு விடவில்லை.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 337 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly **BADAR** Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 25 Nov 2021 Issue No. 47

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

# ஸய்யிதுனா அமீருல் மூமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய) அவர்களின் நியூஸிலாந்து சுற்றுப்பயணம் (2013)

**1 நவம்பர் 2013 (அருளுக்குரிய ஜுமுஆ நாள்)**

**நியூஸிலாந்தின் தேசிய டிவி நிருபரின் ஹுஸூர் (அய்ய) அவர்களுடன் நேர்காணல்:**

நியூஸிலாந்தின் தேசிய டிவி TV NZ ன் நிருபர் தனது குழுவினருடன் ஹுஸூர் (அய்ய) அவர்களை நேர்காணல் செய்வதற்கு பைத்துல் முகீத் பள்ளிவாசலுக்கு வந்திருந்தார். தொழுகைகளை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் (அய்ய) அவர்கள் பள்ளிவாசலின் கீழ்த்தளத்திலுள்ள அறைக்கு வருகை தந்தார்கள். அங்கு அந்த நிருபர் ஹுஸூர் (அய்ய) அவர்களை பேட்டி கண்டார்.

பள்ளிவாசல் கட்டுமானத்தின் நோக்கம் தொடர்பாக ஒரு கேள்விக்கு பதிலளித்தவாறு ஹுஸூர் (அய்ய) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நாங்கள் அஹ்மதி முஸ்லிம்கள் ஆவோம். அனைத்து முஸ்லிம்களுக்கும், ஏனைய அனைத்து மார்க்கத்தைச் சார்ந்தவருக்கும் தமது இறைவணக்க ஸ்தலங்கள் உள்ளன. அனைவரும் ஒன்றுகூடி இறைவனை வணங்குவதற்கு இங்கு அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு முறையான பள்ளிவாசல் இல்லை. எனவே இந்த பள்ளிவாசலைக் கட்டியதன் மாபெரும் நோக்கம் என்னவென்றால், இங்கு ஒன்றுகூடி ஏக இறைவனை ஐவேளை வணங்க வேண்டும் என்பதாகும்.

இரண்டாவதாக, எங்களது பள்ளிவாசல் அனைவருக்காகவும் திறந்துள்ளது. எல்லா மார்க்கத்தைச் சார்ந்தவரும் இங்கு வந்து தமது இறைவணக்கத்தை செய்து கொள்ள முடியும்.

ஹுஸூர் (அய்ய) அவர்கள் கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் அபிஸீனியாவிலிருந்து ஒரு கிறிஸ்துவ குழு மதீனாவிற்கு வந்தது. அவர்களின் இறைவணக்கத்திற்கான நேரம் வந்தபோது அவர்கள் அனுமதி கேட்டனர். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களது பள்ளிவாசலிலேயே நீங்கள் உங்களது இறைவணக்கத்தை செய்து கொள்ளுங்கள் என்று கூறினார்கள். எனவே எங்களது பள்ளிவாசல் அனைத்து மார்க்கத்தின் இறைவணக்கத்திற்காகவும் திறந்துள்ளது.

ஹுஸூர் (அய்ய) அவர்கள் கூறினார்கள்: எனவே இங்கு நியூஸிலாந்திலும் முறையாக ஒரு பள்ளிவாசலுக்கான தேவை இருந்தது. இங்கு ஒரிடத்தில் ஒன்றுகூடி இறைவணக்கம் செய்வதற்கான தேவை இருந்தது. இதற்காக இதற்கு முன்பு ஒரு ஹால் பயன்படுத்தப்பட்டு வந்தது. எனினும் முறையாக பள்ளிவாசல் இல்லாமல் இருந்தது.

ஒரு கேள்விக்கு பதிலளித்தவாறு ஹுஸூர் (அய்ய) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நான் முன்னரே கூறியதுபோன்று எங்களது இந்த பள்ளிவாசல் இறைவனை வணங்க விரும்புகின்ற ஒவ்வொரு மார்க்கத்தைச் சார்ந்தவருக்கும் திறந்துள்ளது. எங்களது நம்பிக்கை என்னவென்றால், அனைத்து மார்க்கமும் இறைவன் புறமிருந்தே தோன்றியுள்ளன. நாம் அனைவரும் இறைவனின் படைப்பினம் ஆவோம். நாம் எப்படி இறைவனை வணங்குவதற்காக இங்கு வரக்கூடிய ஒருவரை தடுக்க முடியும்?

ஒரு கேள்விக்கு பதிலளித்தவாறு ஹுஸூர் (அய்ய) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இங்கு எங்களது ஜமாஅத்தின் எண்ணிக்கை சுமார் 400 ஆகும். ஆனால் ஒரு நாள் இந்த பள்ளிவாசல் தொழுகையாளிகளால் நிரம்பி விடும் என்றும், எங்களுக்கு மேலும் பள்ளிவாசல்கள் கட்டுவதற்கு இங்கு அவசியம் ஏற்படும் என்றும் நான் நம்புகின்றேன்.

ஒரு கேள்விக்கு பதிலளித்தவாறு ஹுஸூர் (அய்ய) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். இறுதி காலத்தில் இஸ்லாத்தின் பெயரைத் தவிர எதுவும் எஞ்சியிருக்காது. பள்ளிவாசல்கள் நேர்வழியிலிருந்து காலியாக இருக்கும். அப்போது இறைவன் ஒரு நபரை அனுப்புவான். அவர் அனைவரையும் ஒரு கரத்தின் கீழ் ஒன்று கூட்டுவார். எங்களது நம்பிக்கை என்னவென்றால், வரக்கூடிய அந்த நபர் வந்து விட்டார். அவர் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி ஆவார். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுநர் அவரே ஆவார். அவர் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி என்ற பட்டத்துடன் தோன்றியுள்ளார். நாங்கள் முழு உலகிலும் தப்லீக் செய்து வருகின்றோம். இஸ்லாத்தின் உண்மையான தூதுச் செய்தியை எட்ட வைத்து வருகின்றோம். மக்கள் எங்களுடன் இணைந்து வருகின்றார்கள். ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் மரணமடைந்தபோது அந்த நேரத்தில் அன்னாரை ஏற்றுக் கொண்ட மக்களின் எண்ணிக்கை சுமார் அரை மில்லியனாக இருந்தது. தற்போது ஒவ்வொரு வருடமும் அறை மில்லியனை விட அதிகமான மக்கள் அஹ்மதிய்யத்தில் இணைந்து வருகின்றார்கள். நியூஸிலாந்திலும் ஒவ்வொரு வருடமும் இரண்டிலிருந்து நான்கு பைஅத்துகள் வரை நடைபெற்று விடுகின்றன. ஆனால் இனி இன்ஷா அல்லாஹ் இந்த எண்ணிக்கை அதிகரிக்கும்.

மாவூரி மொழியில் திருக்குர்ஆனை மொழியாக்கம் செய்வதற்கு என்ன சிறப்பு உள்ளது? என்று நிருபர் கேட்டார். இதற்கு பதிலளித்தவாறு ஹுஸூர் (அய்ய) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: நாங்கள் திருக்குர்ஆனை எல்லா மொழிகளிலும் மொழியாக்கம் செய்து வருகின்றோம். தற்போது உலகின் 72 மொழிகளில் மொழியாக்கம் செய்து விட்டோம். அந்த 72 மொழிகளில் ஒரு மொழி மாவூரி மொழி ஆகும். கானாவிலும் கோத்திரங்கள் உள்ளன. நாங்கள் அவர்களின் மொழிகளிலும் திருக்குர்ஆனை மொழியாக்கம் செய்துள்ளோம்.

ஹுஸூர் (அய்ய) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: திருக்குர்ஆன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது இறங்கியது. அதில் அல்லாஹ் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கி இவ்வாறு அறிவித்திருந்தான். அல்லாஹ் கூறுகின்றான்:

قُلْ يَا أَيُّهَا النَّاسُ إِنِّي رَسُولُ اللَّهِ إِلَيْكُمْ جَمِيعًا

நீர் கூறுவீராக! மனிதர்களே நிச்சயமாக நான் உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் தூதர் ஆவேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழு உலகிற்கும் நபியாக உள்ளார்கள். எனவே அன்னார் மீது இறங்கிய வேதத்தை, அன்னாரின் தூதுச் செய்தியை உலகின் ஒவ்வொரு நபர் வரை எட்ட வைப்பதும் அவசியமாகும். அந்த தூதுச் செய்தி தாய் மொழியில் இருக்கும்போதுதான் ஒவ்வொரு நபரும் அதனை உடனடியாக புரிந்து கொள்ள முடியும். எனவே நாங்கள் திருக்குர்ஆனை பல்வேறு மொழிகளில் மொழியாக்கம் செய்து வருகின்றோம். ஏனென்றால் அரபி மொழியை அறியாத மக்களுக்கும் அவர்களின் சொந்த மொழியில் இதன் மொழியாக்கம் சென்றடைந்து விட வேண்டும்.

உலகின் பல்வேறு நாடுகளில் தங்களுக்கெதிராக Persecution (துன்புறுத்துதல்) ஏன் நடைபெறுகின்றது? இந்த கேள்விக்கு பதிலளித்தவாறு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: இறுதி காலத்தில் மஸீஹ் மற்றும் மஹ்தி தோன்றுவார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்னறிவிப்பு செய்திருந்தார்கள். அந்த முன்னறிவிப்பிற்கேற்ப தோன்றக்கூடியவர் காதியானைச் சேர்ந்த ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் அவர்களின் வடிவில் தோன்றி விட்டதாக நாங்கள் கூறுகின்றோம். ஆனால் இன்னும் வரவில்லை என்று ஏனைய முஸ்லிம்கள் கூறுகின்றனர். தோன்றக்கூடியவர் வானத்திலிருந்து இறங்குவார் என்று அவர்கள் காத்திருக்கின்றனர். எனவே இது அடிப்படை வித்தியாசமாகும். இதன் காரணமாகவோ எங்களுக்கெதிராக Persecution (துன்புறுத்துதல்) நடைபெறுகின்றது. பாகிஸ்தானில் மிக அதிகமாக உள்ளது. நாங்கள் நாட்டின் சட்டத்திற்கேற்ப எங்களை முஸ்லிம் என்று கூற முடியாது. ஆனால் இந்த அனைத்து விஷயங்கள் மற்றும் இந்த அனைத்து கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும் நாங்கள் முன்னேறி வருகின்றோம். ஒவ்வொரு வருடமும் லட்சக்கணக்கான மக்கள் அஹ்மதிய்யதில் இணைந்து வருகின்றனர். தொடரும்..... (பத்ர் உருது பத்திரிகை 20 பிப்ரவரி 2014)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad